*திகம்பரா திகம்பரா ஸ்ரீபாதவல்லப திகம்பரா!*

## அத்தியாயம் 39

சித்தமுனி மேலும் ஸ்ரீகுரு லீலைகளை சொல்லலானார். காணகாபுரத்தில் சௌனக கோத்திரம், ஆபஸ்தம்ப யஜுர்வேத பிரிவை சேர்ந்த சோமநாதன் என்ற பிராமணர் தர்மம் தவறாமல் நித்தமும் தானங்களைச் செய்து கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்குப் பதிவிரதையான கங்கா என்ற மனைவி இருந்தாள். அந்த அம்மையாருக்கு வயது அறுபது. அந்த அம்மையார் நித்தமும் தன் கணவருக்கு சேவை செய்து ஸ்ரீகுருவுக்கு ஆரத்தி எடுத்து வந்து கொண்டிருந்தாள். இப்படி இருக்க ஒருநாள் ஸ்ரீகுரு அவளிடம் "அம்மா நீ வருடக் கணக்கில் எனக்குப் பூஜை செய்கிறாய். ஆனால் உன் கோரிக்கை என்னவென்று சொல்லவில்லையே. அது எதுவாக இருந்தாலும் கேள். அந்த மகேசனின் தயவில் நான் தீர்த்து வைக்கிறேன்" என்றார். குருவின் பேச்சைக் கேட்டதும் அவள் ஆனந்தமடைந்து கையை ஏந்தி 'சுவாமி நான் முற்பிறவியில் என்ன பாவம் செய்தேனோ தெரியவில்லை. அதனால் எனக்கு இந்த பிறவியில் பிள்ளைப்பேறு இல்லை. எல்லோரும் என்னை மலடி என்று சொல்கிறார்கள். பிள்ளைகள் இல்லாதவர்களின் வீடு காடு போன்றது. ஓர் மகனிருந்தால் எங்களுக்கும் எங்கள் முன்னோருக்கும் பித்ரு தர்ப்பணங்கள் செய்ய முடியும். அது இல்லாததால் எங்களுக்கும் எங்கள் முன்னோர்களுக்கும் நற்கதி கிடைக்காது. எனக்கு அறுபது வயதாகிவிட்டது. ஆகையால் இனிமேல் பிள்ளைகள் பிறக்கமாட்டார்கள். ஆகையால் அடுத்த பிறவியிலாவது பிள்ளைப்பேறு கிடைக்க வேண்டுமென்ற கோரிக்கையுடன் உங்களைச் சேவிக்கிறேன்' என்றாள். அதைக்கேட்ட ஸ்ரீகுரு "அம்மா உங்களுக்கு அடுத்த பிறவியில் குழந்தைகள் இருந்தால் அது நான் கொடுத்த வரத்தால் என்று எப்படி நினைக்க முடியும். ஆகையால் இப்பொழுதே உங்களுக்கு ஒரு மகனும், மகளும் பிறப்பார்கள்" என்று ஆசி வழங்கினார்.



இதைக்கேட்ட கங்கா "தெய்வமே எனக்கு ஒரு சந்தேகம் கேட்கின்றேன். தவறாக எண்ண வேண்டாம். எனக்கு அறுபது வயதாகிவிட்டது. மாதவிடாயும் நின்றுவிட்டது. பிள்ளைப்பேறு எப்படி கிடைக்கும்? மேலும் இத்தனை நாளும் குழந்தைகளுக்கான விரதங்கள் செய்தேன். தீர்த்த யாத்திரைகள் செய்தேன். அரச மரங்களை சுற்றியும் எனக்கு ஒரு பலனும் கிடைக்கவில்லை" என்றாள். அவளின் வேதனையும், அத்ருப்தியும் கண்டு சுவாமி சிரித்து "அம்மா அரச மரத்தை நிந்தனை செய்யாதே. அதை 'அஸ்வத்த நாராயணன்' என்று அழைப்பார்கள். அந்த மரத்திற்குச் செய்யும் சேவை மிக புண்ணியமானது. நீ இனிமேல் சங்கமத்திலிருக்கும் அரச மரத்துக்கு ப்ரதிக்ஷினங்கள் செய். இந்த அரச மரம் பற்றி புராணங்களில் வெகுவாகப் போற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் நான் அந்த மரத்தடியில் இருப்பேன்" என்றார்.

அதைக்கேட்ட அவள் "சுவாமி அரச மரத்தின் மகிமையை சொன்னால் மேலும் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு இன்னும் பக்தியுடன் சுற்றி வருவேன்" என்று வேண்டினாள். சுவாமி "அம்மா பிரம்மாண்ட புராணத்தில் அரச மரத்தின் மகிமையை நாரதர் சொல்லி இருக்கிறார் அதைக் கூறுகிறேன். அரச மரத்தின் அடிப்பாகத்தில் பிரம்மா வசிக்கிறார். நடுப்பாகத்தில் விஷ்ணு இருக்கிறார். மேல் பகுதியில் ஈசன் இருக்கிறார். ஆகையால் அரச மரத்தைச் சுற்றினாலும் பூஜை செய்தாலும் மும்மூர்த்திகளை பூஜித்தது போல் ஆகும். அதனின் தெற்கு கிளிகைளில் சூலபானியும், மேற்கு கிளைகளில் விஷ்ணுவும், வடக்குக் கிளைகளில் பிரம்மாவும், கிழக்கு கிளைகளில் இந்திராதி தேவர்களும், வேர்களில் பிராமணர்கள், ரிஷிகள், பசுக்கள், வேதங்கள், யஞ்ங்கள் இருக்கும். மரத்தின் அடியில் 'அ' காரம் தண்டில் 'உ' காரமும், பழங்களில் 'ம' காரம் இருக்கும். அந்த மரம் முழுவதும் 'ஓம்' என்ற பிரணவம் தான். அந்த மரம் அப்படியே 'கல்பவிருட்சம்' அதனுடைய மகிமையை விவரிக்க யாராலும் முடியாது. அரச மரத்தை எப்படி சேவிக்க வேண்டுமென்பதை நாரதர் சொல்லலானார். சித்திரை, ஆடி,

தை மாதங்களிலும் குரு, சுக்கிர மௌட்டியமியுலும், தேய்பிறையிலும் அரச மரம் சுற்றுவதை ஆரம்பிக்கக்கூடாது. ஞாயிறு, திங்கள், வெள்ளிக்கிழமைகளில், சந்கரமண நேரங்களில், தீட்டு நேரங்களில், இரவு சாப்பாடு சாப்பிட்ட பிறகும் அரச மர சேவை செய்யக்கூடாது. சுபமுகூர்த்த நேரம் பார்த்து, நீராடி சுத்தமாக, உண்ணா விரதமிருந்து பூஜை ஆரம்பிக்க வேண்டும். அரசமர சேவை செய்பவர்கள் பொய் சொல்லக்கூடாது, சூதாடக்கூடாது, பிறரை நிந்தனை செய்யக்கூடாது. குளித்து ஈர துணிகளுடன் இரண்டு சொம்புகளில் நீரை கொண்டு வந்து அதில் கங்கா, யமுனா நதிகளைப் பூஜித்து, முதலில் கணபதியை வணங்கி, அந்த நீரினால் ஏழுமுறை மரத்திற்கு அபிஷேகம் செய்ய வேண்டும். மீண்டும குளித்து வேறு துணிகளை உடுத்தி ஷோடஸோபசார (ஆறு விதமான) பூஜை செய்து, எட்டு கரங்களைக் கொண்ட ஸ்ரீவிஷ்ணுவைப் போல நினைத்துத் தியானம் செய்ய வேண்டும். பிறகு விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்லிக்கொண்டு, இல்லையெனில் மௌனமாக மெல்ல மெல்ல வலம்வர வேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கு முன்பும், பின்பும் வணக்கம் செய்ய வேண்டும். இப்படி இரண்டு லட்சம் சுற்றுகள் செய்தால் எல்லா பாவங்கள் தீர்ந்து சகல சௌபாக்கியமும் பெறலாம். மனம், வாக்கு, கர்மாக்களை சுத்தமாக வைத்து அதன்மேல் விழியை வைத்து பிள்ளைப்பேறு பெற வேண்டுமென்ற உறுதியான கோரிக்கையுடன் சுற்றி வந்தால் கண்டிப்பாக குழந்தைகள் பிறப்பார்கள். சனிக்கிழமைகளில் அரச மரத்தைத் தொட்டு மிருத்துஞ்சய மந்திரத்தை ஜபித்தால் அகால மரணம் ஏற்படாது. சனி தோஷமுள்ளவர்கள்

கோணஸ்த்த பிங்களோ பப்ரு:

க்ருஷ்னோ ரௌத்ராந்தகோ யம:

சௌரி சனைஸ்வரோ மந்த:

பிப்பலா தேவ ஸம்ஸ்துத: என்ற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு வலம் வந்தால் சனி தோஷம் நீங்கிவிடும். வியாழக்கிழமை அமாவாசை கலந்து வரும் நாளில் அரச



மரத்தடியில் குளித்தால் பாவங்கள் தீர்ந்துவிடும். அந்த மரத்தடியில் ஜபம் செய்தால் ஆனந்தம் மற்றும் கோடி நன்மைகள் கிடைக்கும். அங்கே வேதபிராமணர்க்கு அன்னதானம் செய்தால் கோடி பிராமணர்களுக்கு அன்னதானம் செய்த பலன் கிடைக்கும். அரச மரத்தை நடுபவர்களின் முன்னோர்களுக்கு நிரந்தர சொர்க்கம் கிடைக்கும். அதை வெட்டினால் அவரின் முன்னோர்களும், அவரும் நரகத்துக்குச் செல்வார்கள். வலம் வருவதை பூர்த்தி செய்து அன்னதானம் செய்து சக்திக்கேற்ப பிராமணருக்கு தங்க அரசமரம், பசு தானமாகக் கொடுக் வேண்டும். இப்படிச் செய்தால் கண்டிப்பாக தாங்கள் நினைத்தது நிறைவேறும். ஆகையால் அம்மா நீ சங்கமத்திலிருக்கும் அரச மரத்தை சேவித்தால் உனக்குப் பிள்ளைகள் பிறப்பார்கள்" என்று குருமூர்த்தி சொன்னார்.

அதைக்கேட்ட கங்கா "சுவாமி எனக்கு அறுபது வயதாகிவிட்டது. மாதவிடாய் நின்றுவிட்டது. எனக்குப் பிள்ளைகள் எப்படி பிறப்பார்கள்? ஆனாலும் நீங்கள் இங்கே இருக்கையில் நான் ஏன் அரசமரத்தைச் சுற்ற வேண்டும்? இருப்பினும் குருவின் சொல் அமோகமானதும், காமதேனுவை போன்றதும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அந்த நம்பிக்கையோடு நான் நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்" என்று சொல்லி அன்று முதல் மூன்று நாட்கள் சங்கமத்தில் நீராடி அரசமரத்துக்கு ஏழு தவலைகள் தண்ணீரினால் அபிசேகம் செய்து ஸ்ரீகுருவையும் சேர்த்து அசரமரத்தை சேவித்து மூன்று இரவுகள் அங்கே உறங்கினார்கள். மூன்றாம் நாள் இரவு கனவில் ஒரு பிராமணர் தோன்றி "அம்மா உன் கோரிக்கை நிறைவேறியது. நாளை காலை ஸ்ரீகுருவை பூஜித்து அவர் கொடுக்கும் பழங்களைச் சாப்பிடு என்றார். நான்காம் நாள் காலையில் சங்கமத்தில் நீராடி அரசமரத்தை சேவித்து அந்த தம்பதிகள் மடத்துக்கு வந்தார்கள். அப்பொழுது குரு "அம்மா நான் சொன்னது போல் செய்தாய். இந்த பழங்களைச் சாப்பிடு. உனக்கு ஒரு மகனும், மகளும் பிறப்பார்கள்" என்று சொல்ல அவர்கள் சந்தோசமடைந்து வீட்டுக்குச்

சென்று அவள் அந்த பழங்களைச் சாப்பிட்டு விரதத்தைப் பூர்த்தி செய்தாள்.

அன்று மாலையே அவளுக்கு மாதவிடாய் வந்தது. மூன்று நாட்கள் வீட்டில் தூரமாக இருந்து நான்காம் நாள் குளித்து ஐந்தாம் நாள் ஸ்ரீகுருவின் சன்னிதானத்துக்கு கணவருடன் சென்று அவரை வணங்கி பூஜை செய்தார்கள். அப்பொழுது குருமூர்த்தி `பிள்ளை பேறு பெறுவாய்' என்று ஆசிர்வதித்தார். ஸ்ரீகுருவின் மகிமையினால் அவள் கர்ப்பம் தரித்தாள். அவளுக்குச் சோமனாதன் சீமந்தம் செய்தார். மீண்டும் ஸ்ரீகுருவை தரசிக்கச் சென்ற போது "அம்மா பழுத்த சுமங்கலிகளுக்கு வாயனங்கள் தானமாகக் கொடு. அவர்களின் ஆசியினால் சுகப் பிரசவமாகும்" என்று சொன்னார். அவளும் அப்படியே செய்தாள்.

நிறை மாதம் ஆனபொழுது ஓர் நன்னாளில் அவளுக்குப் பெண் சிசு பிறந்தாள். அந்தக் குழந்தையின் ஜாதகத்தைப் பார்த்த ஜோதிடர்கள் இவள் பெறும் அதிர்ஷ்டம் கொண்டவள் என்று சொன்னார்கள். பதினொன்றாம் நாள் அவள் தீட்டைக் கழித்து இடுப்பில் குழந்தையுடன் ஸ்ரீகுருவிடம் சென்று குருவின் காலடியில் அந்தக் குழந்தையைப் படுக்க வைத்து "சுவாமி காய்க்காத ஒரு மரத்தில் கனிகளை காயவைத்தாய். அது நல்ல கனிகளை கொடுத்தால் எல்லோருக்கும் உபகாரமாக இருக்கும்" என்று வணங்கினாள். அப்பொழுது அந்தக் குழந்தையை கையில் ஏந்தி சரசுவதி என்ற பெயர் வைத்து "அம்மா இந்தக் குழந்தை நீண்ட ஆயுளுடன், சௌபாக்கியம், நற்குணங்களுடன் புகழ் பெறுவாள். இவள் புகழைக் கேட்டு வேதம், சாத்திரம் படித்த ஓர் சத்பிராமணர் கணவனாக வருவான். ஆனால் இக்குழந்தை பெண்தான். உங்களுக்கு நூறு வயது வாழும் அறிவில்லாத மகன் வேண்டுமா? அல்லது முப்பது வயது வாழும் அறிவுள்ளவன், வித்வானான மகன் வேண்டுமா?" என்று கேட்டார். அவள் அறிவுள்ள, வித்வானான முப்பது வயது வாழக்கூடிய மகன்தான் வேண்டும். ஆனால் அவனுக்கு ஐந்து பிள்ளைகள் பிறக்குமாறு ஆசி வழங்குங்கள் என்று சொல்லி சுவாமியின்



பாதங்களைத் தொட்டு வணங்கினாள். சுவாமியும் அப்படியே ஆகும் என்று ஆசி கூறினார். ஒரு வருடத்திற்குள் ஓர் ஆண்பிள்ளை பிறந்தான். அவனுக்கு நரசிம்மா என்ற பெயரை வைத்து ஸ்ரீகுருவை இன்னும் சிரத்தையுடன் சேவித்துக் கொண்டிருந்தார்கள். சரசுவதிக்கு பெரும் யஞுதீக்ஷிதருடன் விவாகம் நடந்தது. அவனுடன் யஞ்ங்களைச் செய்து கொள்ள காசி, மற்றும் வெகு தொலைவிலிருந்தும் வந்து அவனைக் கூட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். நரசிம்மனும் பெறும் பண்டிதனாய் ஐந்து பிள்ளைகளைப் பெற்றான். "நாமதாரகா பார்த்தாயா ஸ்ரீகுருவின் மகிமையினால் அறுபது வயதான மலடி பெண் பிள்ளைகளை பெற்றாள். ஆதலால் திடமான முழு நம்பிக்கையுடன் சேவிப்பதே நமது கடமை" என்று கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 40

சித்தயோகி ஸ்ரீகுருவின் லீலைகளை மேலும் சொல்லலானார். கந்தர்வபுரத்திற்கு ஒருநாள் யஜுர்வேதப் பிரிவு, 'கார்க்ய' கோத்திரத்தைச் சேர்ந்த நரஹரி என்ற தொழுநோய்க் கொண்ட பிராமணர் வந்தார். அவர் சுவாமிக்கு வணக்கம் தெரவித்து, "அய்யா நான் முற்பிறவியில் எவ்வளவோ பாவங்கள் செய்ததினால் இப்பிறவியில் எனக்கு இந்த தொழுநோய் வந்தது. நான் வேதம் படித்தும், என்னை யாரும் சாப்பாட்டுக்கு கூப்பிடுவது இல்லை. என் முகம் பார்க்கக்கூட விரும்புவதில்லை. இந்த வியாதி போக நான் எத்தனையோ கோயில்களுக்குச் சென்றேன். நதிகளில் நீராடினேன். புனிதத் தலங்களைத் தரிசித்தேன். ஆனாலும் இந்த தொழுநோய் என்னை விடவில்லை. உங்களின் புகழை அறிந்து இந்த நோயைப் போக்கிக் கொள்ள இங்கு வந்தேன். உங்கள் அருளினால் எனக்கு இந்த நோய் போகவில்லை என்றால் இங்கே நான் உயிரை விடத் தீர்மானித்தேன்" என்று சொன்னான்.

பக்தவத்சலான ஸ்ரீகுரு அவனை கருணித்து "பிராமணரே நீ முற்பிறவியில் செய்த பாவங்களினாலே உனக்கு இந்த நோய் வந்தது. அது போக உனக்கு நான் ஒரு வேலையைச் சொல்கிறேன். அப்படிச் செய்தால் இந்த நோய் போய் அழகான உடலைப் பெறுவாய்" என்று சொல்லி அந்தச் சமயத்தில் அந்த வழியே விறகுகளை தூக்கி சென்று கொண்டிருந்த ஒருவனை அழைத்து அவனிடமிருந்த மிகக் காய்ந்த அத்தி மரத்தின் கொம்பு ஒன்றை இவனிடம் கொடுத்து "பிராமணரே இந்த அத்தி மர (அஸ்வத்தம்) கொம்பை சங்கமத்திலிருக்கும் சங்கமேசுவரரின் எதிரில் நட்டு தினமும் மூன்று காலங்களில் நீரைக் கொண்டு வந்து இதற்கு அபிசேகம் செய்ய வேண்டும். அப்படிச் செய்கையில் என்று அது துளிர்க்கிறதோ அன்றைய தினம் உன் நோய் உன் உடலிலிருந்து போய்விடும்" என்று கூறினார்.



அந்தப் பிராமணர் ஸ்ரீகுருவின் வாக்கின் மேல் பூரண நம்பிக்கை வைத்து அவர் கூறியது போல் சங்கமேசுவரரின் எதிரில் அதை நட்டு உபவாசமிருந்து மூன்று காலங்களிலும் அதை அபிசேகம் செய்து வந்தான். அதைப் பார்த்த சிலர் "ஏனய்யா இந்த காய்ந்த மரம் துளிருமா? உன் வியாதி போகாதென்பது உன்னிடம் சொல்ல முடியாமல் ஸ்ரீகுரு இப்படி உன்னை செய்யச் சொன்னார். அவர் இறந்தவர்களை பிழைக்க வைக்கும் பொழுது உன் நோயை போக்குவது அவருக்கென்ன பெரும் காரியமா? இந்த மரம் துளிர்வது பொய். உன் நோய் போவதும் பொய்" என்று சொல்ல, அவன் "எனக்குக் குருவின் சொல்லே முக்கியமானது. அவர் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது அவரின் வேலை" என்று கூறி அவன் தினமும் அத்தி மரத்தை அபிஷேகம் செய்து வந்தான். இப்படி ஒரு வாரம் கடந்தது.

ஒருநாள் ஸ்ரீகுருவிடம் சிலர் "சுவாமி நீங்கள் அன்று அந்த பிராமணருக்குச் சொன்னதை தண்ணீர் கூட குடிக்காமல் செய்து கொண்டிருக்கிறான். யார் என்ன சொன்னாலும் கேட்காமல் ஸ்ரீகுரு சொன்னது போல் செய்வது என் வேலை. வாக்கை நிறைவேற்றுவது அவர் வேலை என்று கூறி வருகின்றான். அவனுக்கு நீங்களாவது சொல்லுங்கள். இல்லையெனில் அவன் அப்படியே செய்து கொண்டிருப்பான்" என்றார்கள். இதைக்கேட்ட ஸ்ரீகுரு இந்த உலகில் குருவின் வாக்கு ஒன்றுதான் மனிதனை காப்பாற்ற முடியும். அதை நம்பியவர்களுக்குக் கேட்டதெல்லாம் கிடைக்கும். யார் யார் நினைவுகள் எப்படி இருக்குமோ, பயனும் அப்படி இருக்கும். இதற்கு உதாரணமாக கந்த புராணத்திலிருக்கும் கதையைக் கூறுகிறேன் கேளுங்கள். பாஞ்சால நாட்டை சிம்மகேது என்ற மன்னன் ஆண்டு கொண்டிருந்தான். அவருக்கு தனஞ்சயன் என்ற மகன் இருந்தான். அவன் வேட்டையாட காட்டிற்குச் சென்று வெகுநேரம் வேட்டையாடி தாகம் கொண்டு தண்ணீரைத் தேடிச் செல்கையில் வழியில் ஒரு வேடன் தென்பட்டு அவரை ஒரு தண்ணீர் நிறைந்திருக்கும் குளத்திற்கு அழைத்துச் சென்றான்.

அங்கு தனஞ்சயன் நீரைப் பருகி அருகிலுள்ள பாழடைந்த சிவன் கோவிலுக்குச் சென்று அங்கு சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்ள அமர்ந்தார். அந்த நேரத்தில் வேடன் உள்ளே உள்ள சிவலிங்கத்தை கண் இமை அசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த தனஞ்சயன் "ஏன் சிவலிங்கத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்" என்று கேட்டார். அதற்கு வேடன் "எனக்கு சிவலிங்கத்தைக் கொண்டு போய் பூஜை செய்ய ஆவலாக உள்ளது. ஆனால் காட்டுவாசியான எனக்கு சிவபூஜை எப்படிச் செய்ய வேண்டுமென்று தெரியவில்லை. உங்களை என் குருவைப் போல் பாவிக்கிறேன். பூஜை செய்யும் விதத்தைச் சொன்னால் நான் அப்படியே செய்வேன்" என்று சொன்னான். "அப்படியானால் சிவலிங்கத்தை உன் வீட்டிற்குக் கொண்டு போய் ஓர் இடத்தை சுத்தம் செய்து அங்கு வை. இந்த லிங்க ரூபத்தில் சாட்சாத் சிவபெருமான் உங்கள் வீட்டில் இருக்கிறார். தினமும் உன் மனைவியுடன் சிரத்தையாக பூஜை செய். சுடுகாட்டிலிருந்து தினமும் பிணங்களை எரித்த சாம்பலைக் கொண்டு வந்து சிவனுக்கு அர்ப்பித்து, நீ உட்கொள்ளும் உணவை அவருக்குப் படைத்து அதை சிவபிரசாதமாக பாவித்துச் சாப்பிடு" என்று கூறினார்.

அந்த வேடன் லிங்கத்தை வீட்டிற்குக் கொண்டு போய் தனஞ்சயன் கூறியது போல் தினமும் செய்து கொண்டிருந்தான். ஒருநாள் அவனுக்கு சுடுகாட்டில் சாம்பல் கிடைக்கவில்லை. வேதனையுடன் வீட்டிற்கு வந்து மனைவியிடம் "இன்று சிவபூஜை என் குரு சொன்னது போல் செய்ய முடியவில்லை. குருவின் சொல்லை மீறியவர்களுக்கு நரகம், தரித்திரம் ஏற்படும். ஆகையால் நான் என் உயிரை விடுவேன்" என்றான். அதைக் கேட்ட மனைவி அவனைத் தேற்றி "ஏன் நீங்கள் வருந்துகிறீர்கள். நம் வீட்டிலிருக்கும் விறகுகளால் என்னை எரித்து அந்தச் சாம்பலைக் கொண்டு சிவபூஜை செய்யுங்கள். என் உடலை சிவனுக்கு அர்ப்பணம் செய்வதில் தவறேதுமில்லை. இதை நான் மனப்பூர்வமாகவும், சந்தோஷமாகவும் சொல்கிறேன்" என்றாள்.



அதைக்கேட்ட வேடன் "நீ இளம்பெண். இல்லற வாழக்கையை முழுமையாகக் கூட அனுபவிக்கவில்லை. மேலும் உன்னை என் உயிருள்ளவரை காப்பாற்றுவேன் என்று கூறி திருமணம் செய்து கொண்டேன். ஒரு பெண்ணைக் கொன்றேன் என்ற அவதூறு வரும். இப்படிப்பட்ட பாவம் செய்வதற்கு அந்த சிவன் கூட என்னை மன்னிக்கமாட்டார்" என்று வேதனையுடன் வருந்தினான். இதைக்கேட்ட அவள் "ஏன் உனக்கு என்மேல் இவ்வளவு மோகம். இந்த உடல என்றோ ஒருநாள் அழிந்துவிடக் கூடியதுதானே. என் பெற்றோர்கள் என்று என்னை உங்களுக்கு மணம் முடித்தார்களோ அன்று முதல் நான் உங்கள் சொத்து. ஆகையால் வேறு எண்ணமில்லாமல் என்னை எரித்து அந்த சாம்பலைக் கொண்டு சிவபூஜை செய்யுங்கள். இதனால் உங்கள் சிவபூஜைக்கு தடை ஏற்படாது" என்று சொல்லி அவனை ஒப்புக்கொள்ளச் செய்து அவள் வீட்டின் உள்ளே சென்று கதவை மூடிக்கொண்டு வீட்டிற்குத் தீ வைக்கச் சொன்னாள். தீ வைத்ததும் வீடு பற்றி எரிந்து அவளும் எரிந்து சாம்பலானாள். வேடன் அந்த சாம்பலை எடுத்து சிவபூஜை செய்து பக்தியுடன் ஈசனை வணங்கி என்றும் போல் பிரசாதத்தை எடுத்துக்கொள்ள தன் மனைவியைக் கூப்பிட்டான். சிவனின் அருளினால் அவள் உயிர் பெற்று நடந்து வந்து பிரசாதம் சாப்பிட்டு பார்க்கையில் அந்த வீடு என்றும் போல் காணப்பட்டது. அதைப் பார்த்த வேடன் "நான் இந்த கைகளினால் வீட்டை எரித்தேன். அதில் நீயும் எரிந்தாய். ஆனால் நீ எப்படி உயிருடன் வந்தாய். நம் வீடும் என்றும் போல் இருக்கிறது" என்று ஆச்சரியத்துடன் கேட்டான். அவள் "நான் உள்ளே சென்ற உடனே எனக்குத் தூக்கம் வந்தது. நான் தூங்கிவிட்டேன். நீங்கள் கூப்பிடும் குரலைக் கேட்டதும் எழுந்து வந்தேன். இது எல்லாம் சிவன் லீலைதான்" என்று சொல்லிக் கொண்டிருக்கையில் அவர்கள் முன் ஈசன் தோன்றி "உங்கள் பக்திக்கு சந்தோசமடைந்தேன். நீங்கள் திட நம்பிக்கையுடன் என்னைப் பூஜித்ததற்காக கோடி வருடம் சொர்க்கத்தில் வாழ்வீர்" என்று ஆசி வழங்கி மறைந்தார்.

"ஆகையால் குரு சொன்ன வார்த்தையில் நம்பிக்கை வைத்து எவனொருவன் செய்கிறானோ அவனுக்கு நினைத்தது நடக்கும். ஆகையால் அந்தப் பிராமணர் என் பேச்சுக்குக் கட்டுப்பட்டு திட நம்பிக்கையுடன் அத்திமரத்திற்கு பூஜை செய்கிறான். அவன் பூஜை வீண் போகாது" என்று சொல்லி சங்கமத்திற்குச் சென்று கமண்டலத்திலிருந்து நீரை எடுத்துக் காய்ந்த அத்தி மரக்கொம்பின் மேல் தெளித்தார். அது அடுத்த நொடியிலேயே துளிர்ந்து பெரும் மரமாகி விட்டது. அதே கனத்தில் அந்த தொழுநோய்க்காரனும் அழகான பொன் ஒளியுடன் கூடிய உருவம் பெற்றான். அவன் தன் அழகான உடலைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்டு மனம் குளிர பக்தி பரவசத்துடன் ஸ்ரீகுருவை இப்படி துதிக்கலானான்.

சுலோகம்:

இந்து கோடி தேஜ கிர்ண சிந்து பக்தவத்சலம்
நந்தனாத்ரி சூனுதத்த இந்திராட்ச ஸ்ரீகுரும்
கந்த மால்ய அக்ஷதாதி வ்ருந்த தேவ வந்திதம்
வந்தயாமி நரசிம்ஹ சரசுவதீச பாஹிமாம்.

பொருள்:- கோடி சூரியன், கோடி சந்திரன் நிகரான ஒளி பெற்று தேவதைகளால் பூஜை செய்யும் பக்த பிரியனாய், பக்தர்களுக்கு வரங்கள் அளிப்பவராய், கலியுகத்தில் தர்மத்தை நிலைநாட்ட அவதரித்த நரசிம்ம சரசுவதி சுவாமீ வந்தனம். என்னைக் காப்பற்றுங்கள்.

சுலோகம்:

மோஹ பாச அந்தகார சாயதூர பாஸ்கரம்
ஆஹிதாக்ஷ பாஹிஸ்ரீய வல்லபேச நாயகம்
ஸேவ்ய பக்த வ்ருந்த வரத பூயோ பூயோ நமாம்யஹம்
வந்தயாமி நரசிம்ஹ ஸரஸ்வதீச பாஹிமாம்.

பொருள்:- மாயாபாசம் என்ற இருளில் இருக்கும் பக்தர்களுக்கு சூரியனாகவும், அகன்ற கண்களைக் கொண்டு லட்சுமிபதியாய்,



உன்னை சேவிக்கும் பக்த கோடிகளுக்கு உன்னதமான வரங்கள் அளிக்கும் நரசிம்ம சரசுவதி சுவாமி வந்தனம். என்னைக் காப்பாற்றுங்கள்.

சுலோகம்:

சித்தஜாதவர்கஷட்க மத்தவார்ணாங்குசம்
ஸத்வஸார சோபிதாத்ம தத்தஸ்ரீயாவல்லபம்
உத்தமாவதார பூத கர்த்ரு பக்தவத்ஸலம்
வந்தயாமி நரசிம்ஹ ஸரஸ்வதீச பாஹிமாம்

பொருள்:- மனதில் பிறக்கும் காமம், கோபம், லோபம், மோகம், மதம், வெறுப்பு என்ற மதங்கொண்ட யானைகளை அடக்கும் அங்குசமாக இருப்பவனும், பக்தர்களின் மேல் அன்பினால் சுத்த ஸத்வத்தை ஏற்று அற்புதமான அவதாரம் எடுத்த நரஸிம்ம சரசுவதி சுவாமி வந்தனம். என்னைக் காப்பாற்றுங்கள்.

சுலோகம்:

வ்யோம வாயுதேஜ ஆப பூமி கர்த்ருமீச்வரம்
காமக்ரோத மோஹரஹித ஸோம சூர்யலோசனம்
காமிதார்த்த தாத்ருபக்த காமதேனு ஸ்ரீகுரும்
வந்தயாமி நரசிம்ஹ ஸரஸ்வதீச பாஹிமாம்.

பொருள்:- ஐந்து பூதங்களால் உருவான உலகிற்கு கர்த்தாவாகி விருப்பு, வெருப்பு இல்லாத பக்தர்களுக்கு காமதேனுவாக அவர்களின் கோரிக்கைகளை தீர்த்து வைக்கும், சூரிய, சந்திரனை இரு கண்களாகக் கொண்ட ஓ குருமூர்த்தி நரசிம்ம சரசுவதி சுவாமி வந்தனம். என்னைக் காப்பாற்றுங்கள்.

சுலோகம்:

புண்டரீக ஆயதாக்ஷ குண்டலேந்து தேஜஸம்
சண்டதுரித கண்டனார்த்த தண்டதாரி ஸ்ரீகுரும்
மண்டலீக மௌலி மார்தாண்ட பாஸிதானனம்
வந்தயாமி நரஸிம்ஹ ஸரஸ்வதீச பாஹீமாம்.

பொருள்:- தாமரை போல் அழகான கண்களைக் கொண்டு சந்திரன் போல் ஒளி கொண்ட முகம் உடையவனே, பக்தர்களின் இன்னல்களைப் போக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தண்டத்தை ஏந்தியவனே, கமண்டலத்தைக் கையில் ஏந்தி யோகியாக இருக்கும் ஓ ஸ்ரீஹரி! நரசிம்ம சரசுவதி சுவாமி வந்தனம். என்னைக் காப்பாற்றுங்கள்.

சுலோகம்:

வேத சாஸ்திர ஸ்துத்ய பாதமாதிமூர்த்தி ஸ்ரீகுரும்

நாத பிந்து கலாதீத கல்பபாத ஸேவ்யயம்

ஸேவ்ய பக்த வ்ருந்த வரத பூயோ பூயோ நமாம்யஹம்

வந்தயாமி நாரஸிம்ஹ ஸரஸ்வதீச பாஹிமாம்

பொருள்:- வேத சாத்திரங்களால் போற்றப்படும் தாமரைப் பாதங்கள் உடையவனாய், நாதபிந்து கலைகள் இருந்தும் அவைகளுக்கு அப்பாற்பட்டவனாய், மூன்று விதமான தொல்லைகளினால் அவதிப்பட்டுக் கொண்டு உன்னைச் சேவிக்கும் பக்தர்களுக்கு கல்ப விருட்சமாய் விளங்கும் நரசிம்ம சரசுவதி சுவாமி வந்தனம் என்னைக் காப்பாற்றுங்கள்.

சுலோகம்:

அஷ்டயோக தத்வ நிஷ்ட துஷ்டஞான வாரிதிம்

கிருஷ்ணவேணி தீரவாஸ பஞ்சநதி ஸங்கமம்

கஷ்ட தைன்யதூர பக்த துஷ்டகாம்யதாயகம்

வந்தயாமி நாரஸிம்ஹ ஸரஸ்வதீச பாஹீமாம்.

பொருள்:- ஞானம் பெற நினைத்து உன்னை வேண்டியவர்களுக்கு அஷ்டயோகம் (எட்டு விதமான யோகங்கள்) சித்திகளை வழங்குபவனே - பலவிதமான இன்னல்களால் அவதிப்பட்டு உன்னை வேண்டிய பக்தர்களுக்கு எல்லா நன்மைகளை வழங்கிக் கொண்டு, ஐந்து நதிகளின் சங்கமமான கிருஷ்ணா நதிக்கரையில் வசிக்கும் ஓ நரசிம்ம சரசுவதி வந்தனம். என்னைக் காப்பாற்றுங்கள்.



சுலோகம்:

நரஸிம்ஹ ஸரஸ்வதீச அஷ்டகம்ச ய: படேத்

கோர சம்ஸார சிந்து தாரணாக்ய ஸாதனம்

ஸார ஞான தீர்க்க ஆயு ஆரோக்யாதி ஸம்பதம்

சாருவர்க காம்ய லாப நித்யமேவய: படேத்

பொருள்:- எப்பொழுதும் இந்த நரசிம்ம சரசுவதி அஷ்டகத்தை எவனொருவன் படிப்பானோ அவனுக்கு ஞானமும், நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும், எல்லா செல்வங்களும் நான்கு விதமான புருஷார்த்தங்கள் பெற்று சம்சாரமென்ற கடலைத் தாண்டுவதற்கு ஏதுவாக இருக்கும்.

நரஹரி என்ற அந்தப் பிராமணர் இப்படி குருமூர்த்தியைப் போற்றி பக்தியுடன் வணங்கினான். ஸ்ரீகுரு அவனின் திடமான பக்திக்கு உவந்து அவன் தலையில் தன் வலது கையை வைத்து ஞானராசியாக ஆசி வழங்கினார். காய்ந்த அத்திக் கொம்பு துளிர்ந்து மரமானதையும், பிராமணனின் தொழுநோய் போன அதிசயத்தையும் பார்த்து அங்கு கூடியவர்கள் குருவின் புகழைப் போற்றி வணங்கினார்கள். பின் ஸ்ரீகுரு அந்தப் பிராமணருடன், சீடர்களுடன் அங்கு கூடியவர்களுடன் நதிக்கரையிலிருந்து மடத்திற்குச் சென்றார். நரஹரி சந்தோஷத்துடன் ஊரிலிருக்கும் எல்லா பிராமணர்களுக்கு குடும்ப சமேதமாய் அன்னதானம் செய்தான். அப்பொழுது ஸ்ரீகுரு நரஹரியை கூப்பிட்டு "உன் பக்திக்கு நான் மிக சந்தோஷமடைந்தேன். நீ எல்லா வல்லமையும் பெற்று பண்டிதனாய், சகல ஐஸ்வர்யங்களுடன் சீரும் சிறப்பாக வாழ்வாய். உன் வம்சத்தில் பிறந்தவர்களெல்லாம் வேத பண்டிதர்களாய், நீண்ட ஆயுளும், செல்வத்துடன் வாழ்வார்கள் உனக்கு மூன்று மகன்கள் பிறப்பார்கள்" என்று சொல்லி அவனுக்கு அஷ்டாங்க யோகத்தை உபதேசம் செய்து வித்யா சரசுவதி மந்திரத்தையும் உபதேசம் செய்து "உனக்கு யோகீசுவரன் என்ற பெயர் வைக்கிறேன். நீ உன் மனைவியுடன் வந்து இங்கு என் சன்னிதானத்திலே இரு" என்று கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*

## அத்தியாயம் 41

நாமதாரகன் கைகளைக் கட்டிக்கொண்டு அடக்கத்துடன் சித்தமுனியிடம் 'அய்யா என் முன்னோரான சாயம்தேவன் பக்தியுடன் ஸ்ரீகுருவைச் சேவித்தான் என்று அறிந்தேன். அவரெப்படி சுவாமிக்குச் சீடராய் சேவித்தாரென்று தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறது. தெரிவியுங்கள்' என்று வேண்டினான்.

"அப்பனே முன்பு ஸ்ரீகுரு தீர்த்த யாத்திரைகள் செய்து கொண்டு கோதாவரி நதிக்கரையில் இருக்கும் 'வாசர' சேத்திரத்திற்கு வந்த பொழுது அவரை பக்தியுடன் பூஜை செய்து அவரின் அன்புக்கு பாத்திரமானவன்தான் சாயம்தேவன். பிறகு ஸ்ரீகுரு அங்கிருந்து புறப்பட்டு பல சேத்திரங்களைப் பாவனம் செய்து தீர்த்த யாத்திரைகள் செய்து கொண்டு இந்த கந்தர்வ நகருக்கு வந்தார். பிறகு அவரின் பெருமை நாலாபக்கமும் சென்றடைய அதை அறிந்து ஸ்ரீகுருவை பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் சாயம்தேவன் இந்த கந்தர்வபுரத்திற்கு வந்தார். தூரத்திலிருந்து கந்தர்வநகரைப் பார்த்து அடி அடிக்கு சாஸ்டாங்க நமஸ்காரங்களைச் செய்து கொண்டு மடத்தை வந்தடைந்து ஸ்ரீகுருவை பார்த்து கீழே விழுந்து சாஸ்டாங்கமாக வணங்கி தன் தலைமுடியினால் அவர் பாதங்களின் தூசியைத் துடைத்து இரு கைகளைக் கூப்பி வணங்கி அவரை போற்றலானார்.

"ஹே பரமாத்மா! நீங்கள் மும்மூர்த்திகளின் அவதாரம். உங்கள் தரிசனத்தால் நான் தன்யனானேன். உங்களை கண்டதினால் எல்லா பாவங்களும் அகன்றன. என் முன்னோர்களும் தன்னியனானார்கள். நீங்கள் எல்லா இடங்களிலும் இருப்பவர். சத்குரு! பக்தவத்சலா! ஜயம் உண்டாகட்டும். ஜீவிகளிடம் கருணை என்ற நீர் நிரம்பிய கமண்டலத்தை ஏந்திய நீங்கள் அந்த பிரம்மரே ஆவீர். அந்த நீரை தெளித்து இறந்தவர்களை பிழைக்க செய்கிறீர்கள். தீயவரைத் தண்டிப்பதற்காக என்பதைப்போல் தண்டத்தைப் பிடித்திருக்கும் நீங்கள் மகாவிஷ்ணுவே. பஸ்மத்தையும், ருத்திராட்சைகளைப் போட்டுக் கொண்டு



சன்னியாசியாக இருக்கும் நீங்கள் மகேசனின் அவதாரம்தான். பக்தர்களின் பாவங்களையும், வியாதிகளையும் போக்கக்கூடிய வல்லுனர் நீர். யார் கிருபையினால் இறந்தவன் உயிரை பெற்றானோ, மலட்டு எருமை பாலை கறந்ததோ, காய்ந்த அத்திக் கொம்பு துளிர்ந்து மரமானதோ, கடஜாதிக்காரன் மேன்மை பெற்றானோ அப்படிப்பட்ட உங்களை அறிய யாரால் முடியும்?"

ஸ்ரீகுரு அவன் பக்திக்கு சந்தோசமடைந்து "உன் வம்சத்தினரெல்லாம் என் பக்தர்கள் ஆவார்கள். நீ எனக்கு மிக பிரியமான பக்தர். நீ எல்லோருடன் சங்கமத்திற்குச் சென்று சங்கு நீராடி அங்கே இருக்கும் அரச மரத்திற்கு பூஜை செய்து மடத்திற்கு சாப்பிட வா" என்றார். சாயம்தேவன் சங்கமத்தில் நீராடி அரச மரத்தைச் சேவித்து மடத்திற்கு வந்து சுவாமிக்கு பூஜை செய்து பிட்சை அளித்தார். பிறகு சுவாமி அவரை தன் பக்கத்தில் உட்கார வைத்து "மகனே நீ இப்பொழுது எங்கே இருக்கிறாய். உன் குடும்பத்தாரெல்லாம் சுகமாக இருக்கிறார்களா" என்று நலம் விசாரித்தார். அவன் "சுவாமி உங்கள் அருளால் நானும் என் குடும்பத்தாரும் சுகமாக மேற்கு காஞ்சியில் இருக்கிறோம். என் குடும்பத்தையெல்லாம் என் மகன்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நான் உங்கள் பாதங்களிடமிருந்து உங்களுக்கு சேவை செய்து கொண்டிருக்க விரும்புகிறேன், எனக்கு அனுமதி கொடுங்கள்" என்று வேண்டினான். அதற்கு சுவாமி "பக்தர்களில் மேன்மையானவனே! நான் ஓர் இடத்தில் நிரந்தரமாக இருக்கமாட்டேன். சில நாள் ஊர்களிலும் சில நாள் காடுகளிலும் சுற்றிக் கொண்டிருப்பேன். எங்களுடன் சேர்ந்து இருப்பதும், எங்களுக்கு சேவை செய்வதும் கடினமானது. ஆகையால் நன்றாக யோசனை செய்" என்றார். அதற்கு சாயம்தேவன் "கருணாமூர்த்தியே! உங்களை சரணடைய வேண்டி வந்தேன். வேண்டாமென்று சொல்லாதீர்கள். குருவை சேவிப்பவனுக்கு நரகமே இல்லாதபோது கஷ்டங்கள் எப்படி வரும். குரு சேவையினால் நான்கு வித புருஷார்த்தங்கள் கிடைக்கும். குரு சேவை செய்யும் கரங்கள், குருவை நாடி வரும் பாதங்கள்,

குருவை வணங்கும் சிரம் எவ்வளவோ புண்ணியம் செய்தவை. உங்கள் கிருபை என் மீது பொழியும் பொழுது எனக்கு வேறு பயம் என்ன இருக்கும்? ஆகையால் நான் உங்களிடமே இருந்து சேவை செய்து கொண்டிருப்பேன்," என்று வேண்டினான். ஸ்ரீகுரு "உனக்கு அப்படி ஒரு திட நம்பிக்கை இருந்தால் அப்படியே ஆகட்டும்" என்று சம்மதித்தார். சாயம்தேவன் சந்தோசமடைந்து குருசேவை செய்து கொண்டு மடத்திலே இருந்தார். இப்படி மூன்று மாத காலம் கழித்தது. ஒருநாள் ஸ்ரீகுரு சாயம்தேவனின் திட பக்தியை சோதனை செய்ய நினைத்து எல்லோரும் மாலை நீராட சங்கமத்துக்குச் சென்றார்கள். அங்கு நீராடி சந்தியாவந்தனம் முடித்த பிறகு சாயம்தேவன், சுவாமியும் அரச மரத்தடியில் அமர்ந்தார்கள். அவரின் சீடர்களெல்லாம் மடத்துக்குச் சென்றுவிட்டார்கள். அப்பொழுது ஸ்ரீகுரு ஒரு லீலையைச் செய்தார். அங்கே திடீரென்று பெரும் காற்றை வர வழைத்தார். அந்தக் காற்றுக்கு மரங்களெல்லாம் ஆடத் தொடங்கின. ஆகாயத்தை கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன. பயங்கரமாக உருமிக்கொண்டு மின்னல்களுடன் பெரும் மழை கொட்ட ஆரம்பித்தது. அப்பொழுது சாயம்தேவன் திட பக்தியுடன் நின்று தன் மேலிருந்த துணியை எடுத்து சுவாமிக்கு போத்தி காற்று அடிக்காமல் குறுக்கே நின்றார். இப்படி இரண்டு ஜாம பொழுது கடந்தன. மழை சற்று குறைந்தது. குளிர்காற்று வீச தொடங்கிற்று. அப்பொழுது சுவாமி "குளிர்காற்றினால் எனக்கு உடல் நடுக்கம் அதிகமாயிற்று. ஆகையால் நீ மடத்துக்குச் சென்று நெருப்பு கொண்டு வந்தால் குளிருக்கு நெருப்பு காய்ந்து கொள்ளலாம். நீ செல்லும் பொழுது பாதையில் நேராகப் பார்த்துக் கொண்டு செல். எந்தப் பக்கமும் பார்க்காதே" என்று எச்சரித்து அனுப்பினார். குருவின் ஆணையை சிரமேற்கொண்டு அந்த இருட்டில் மின்னல்களின் வெளிச்சத்தில் தடுமாறிக் கொண்டு சகதியில் மெல்ல நடந்து மடத்தை அடைந்து ஒரு பாத்திரத்தில் நெருப்பை எடுத்துக் கொண்டு திரும்பி வரலானார். ஸ்ரீகுரு என்னை எந்தப் பக்கமும் பார்க்காமல் நேராக பார்த்து வரச்சொன்னார். பாதையில் இருபக்கமும் என்ன



இருக்கிறதோ என்ற ஆவலுடன் ஒரு பக்கம் திரும்பிப் பார்க்க அங்கே ஐந்து தலையுடன் ஒரு நாகப் பாம்பு தன்னுடன் வந்து கொண்டிருந்ததைப் பார்த்து மிக பயந்து நடுங்கிக் கொண்டு மறுபக்கமும் பார்த்தான். அந்தப் பக்கமும் அதேபோல் மற்றொரு பாம்பு வந்து கொண்டிருந்ததை பார்த்து பயத்தில் ஓட்டம் பிடித்து சங்கமத்துக்கு அருகில் வந்த பொழுது அங்கே அவனுக்கு அநேக விளக்குகள் பிரகாசமும், வேத ஒலியும் கேட்டான். ஆனால் குருவின் முன் போன பொழுது தான் முன் பார்த்ததெல்லாம் மறைந்து ஸ்ரீகுரு மட்டும் காணப்பட்டார். மேகங்கள் அகன்று வானம் நிர்மலமாக தென்பட்டது. சுவாமி முன் தீ மூட்டி நடுங்கிக் கொண்டு நின்றான். அப்பொழுது அவனுடன் வந்த இரு நாகங்கள் ஸ்ரீகுருவை வணங்கிச் சென்றன. அவனின் நடுக்கத்தைப் பார்த்த ஸ்ரீகுரு "உன்னைக் காப்பாற்றவே அந்த நாகங்களை அனுப்பினேன். ஆதலால் பயத்தை விட்டுவிடு. நான் சொன்னது போல் குருவின் சேவை மிகக் கடினமானது. ஆகையால் முன்னமே நன்றாக யோசித்து குருசேவைக்கு முற்பட வேண்டும். கலியின் பிரபாவத்தால் இந்திரிய சபலம், அவதூறுகள் முதலியன வரலாம். ஆனால் மனதை திடப்படுத்திக் கொண்டு, ஒரே நோக்குடன் சேவை செய்ய வேண்டும்" என்றார். சாயம்தேவன் குருவிடம் "தேவா எனக்கு குருபக்தி திடமாக இருப்பதற்கு குருபக்தியின் மகிமையைக் கூறுங்கள்" என்று வேண்டினான்.

ஸ்ரீகுரு தேவர் "மகனே முன்பு பார்வதிக்கு ஈசன் சொன்ன குரு பக்தி பற்றி கூறுகிறேன் கேள். குரு பக்தியினால் எல்லாமும் பெற முடியும். சிவனே குருவென்ற திடமான பாவனையுடன் குருவை சேவிக்க வேண்டும். ஜபங்கள், அனுட்டானங்கள் நீண்ட நாள் செய்தால்தான் பயன் பெருவாய். ஆனால் குருபக்தியின் பயன் உடனே கிடைக்கும். தவங்கள், அனுட்டானங்கள், யக்ஞங்கள், தானங்கள் ஒருவேளையில் பயனில்லாமல் போகலாம். ஆனால் குருபக்தி கண்டிப்பாகப் பயன் கொடுக்கும். அதுவுமில்லாமல் குருவிடம் பக்தி உள்ளவனுக்கு யக்ஞங்கள் தானங்கள் செய்த பயனும் வரும். குருபக்தி சுலபமானது,

கடினமில்லாதது. ஆனால் மனதைத் திடப்படுத்திக் கொண்டு முழு நம்பிக்கையுடன் குருவிடம் இருக்க வேண்டும். இதற்குச் சான்றாக ஒரு கதையைச் சொல்கிறேன்.

முன்பு 'த்வஷ்ட' என்ற பிராமணப் பாலகனுக்கு உபநயனம் செய்து வேதங்களைக் கற்ற ஒரு குருவிடம் அனுப்பினார்கள். அங்கு ஒருநாள் பெரும் காற்றுடன் கடும் மழை பெய்தது. அதனால் குருவின் குடிலும் பாழடைந்து மழைநீர் உள்ளே கொட்ட ஆரம்பித்தது. அப்பொழுது குரு த்வஷ்டயை கூப்பிட்டு "அப்பனே மழை பெய்த பொழுதெல்லாம் இந்தக் குடில் பாழாகிறது. இப்படி மழைக்கு, காற்றுக்கு, நெருப்புக்குப் பாழாகாமல் எல்லா வசதிகள் கொண்ட ஓர் குடில் ஒன்றை நீ கட்டிக்கொடு" என்றார். குரு பத்தினி அப்பனே யாரும் போட முடியாதது, தைக்க முடியாததும், பல நிறங்கள் கொண்டதும் எனக்குச் சரியானதும் ஆன ரவிக்கை ஒன்றை கொண்டு வர வேண்டுமென்றாள். இதற்குள் குருமகன் அண்ணா மண் தொட்டுக்காததும், தண்ணீரின் மேல் நடக்ககூடியதும் எப்பொழுதும் எனக்குச் சரியாக இருக்கும் காலணிகள் வேண்டும் என்றான். சிறு குழந்தையான குரு மகள் அண்ணா என் காதுகளுக்குத் தோடுகள், விளையாடுவதற்கு பொம்மை வீடும் வேண்டும். அந்த பொம்மை வீடு ஒரு தூண் மேல் இருக்க வேண்டும். அது தந்தத்தினால் செய்ததும், உடையாததும் என்னுடன் கொண்டு போவதற்குத் தகுந்ததாகவும், தள்ளிச் செல்வதற்கு சக்கரங்கள் உள்ளதாகவும் அதை மடித்துக் கொண்டு போவதற்கு தகுந்ததாய் இருக்க வேண்டும் என்று கேட்டாள். இதைக் கேட்ட சீடனான த்வஷ்டன் அவை நிறைவேற்ற அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு காட்டு வழியாக சென்று கொண்டு இவை எல்லாம் எப்படி என்னால் செய்ய முடியும்? நான் யாரை அணுக வேண்டுமென்ற குழப்பத்துடன் செல்கையில் அவனுக்கு இதற்கு என் குருவயே சரணடைய வேண்டும் என்று தோன்றிற்று. குருதான் காப்பாற்றுவார். அவர்தான் எனக்குக் கதி. கிருபாநிதியான குருவின் கருணை என் மீது இருந்தால் இந்த வேலைகளைச் செய்து



முடிக்கலாம் என்று சென்று கொண்டிருக்கையில் அங்கே ஒரு மகான் தென்பட்டார்.

அவர் பாலகனைப் பார்த்து "அப்பனே நீ எங்கே சென்று கொண்டிருக்கிறாய்? உன் முகம் ஏன் கவலையுடன் இருக்கிறது தெரிவிக்கவும்?" என்று கேட்டார். அவரைப் பார்த்த உடனே த்வஷ்டனுக்கு மனம் நிம்மதி பெற்றது. தன் குருவே இந்த ரூபத்தில் தன் முன் தோன்றினார் என்று நினைத்து அவன் அவரை வணங்கி "அய்யா யாரும் இல்லாத இந்தக் காட்டில் உங்களைப் பார்த்தவுடன் சாட்சாத் அந்த ஈசன் தான் நீங்கள் என்று தோன்றியது. உங்கள் தரிசனத்தால் என் மனம் நிம்மதியடைந்து ஆனந்தமாயின" என்று கூறி தன் குரு குடும்பத்தார் கோரியதை தெரிவித்து அதைத் தீர்க்க எனக்கு வழி தெரியவில்லை. நீங்கள்தான் வழிகாட்ட வேண்டுமென்று வேண்டினான். அந்த மகான் "அப்பனே வேண்டியதையெல்லாம் நிறைவேற்றும் விசுவேசுவரன் காசியில் இருக்கையில் கடினமானது ஏதுமில்லை. நீ காசிக்குச் சென்று விஸ்வநாதரை பூஜை செய். உனக்கு எல்லாமே கிடைக்கும். அவர் வரத்தில் பிரம்மா முதலிய தேவர்களெல்லாம் வேண்டியதைப் பெற்று பெரும் மகிமையை பெற்றார்கள். கேவலம் ஒரு வாய் பால் கேட்ட உபமன்யுவிற்கு அவர் பாற்கடலையே தந்த தயாளமானவர்" என்று கூறினார். அதைக்கேட்ட த்வஷ்டன் "சுவாமி எனக்கு குரு சேவை தவிர வேறொன்றுமே தெரியாது. ஆகையால் காசி எங்கிருக்கிறது. அங்கு எப்படி செல்ல வேண்டுமென்று தெரியப்படுத்துங்கள் என்று வேண்டினான். அந்த மகான் "மகனே காசிக்கு உன்னை நானே கூட்டிச் செல்கிறேன். உன்னால் எனக்கும் காசி விசுவநாதரின் தரிசனம் கிடைக்கும்" என்று கூறி தன் லீலையினால் அவனை ஒரு நொடியில் காசிக்குக் கொண்டு சென்றார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 42

அவர்கள் இருவரும் காசியை அடைந்ததும் அங்கு பூஜை செய்ய வேண்டிய விதத்தை கூறலானார். "முதலில் விசுவேசுவரரின் தரிசனம், அந்தர் குகை, தெற்கு, வடக்கு மாசை யாத்திரை, பஞ்ச க்ரோச யாத்திரை, கங்கையில் நீராடுதல், தானம், அர்ச்சனை, சிரார்த்தங்கள் விடுதல், பிறகு அன்னபூர்ணா, விசுவேச்வரர், பிந்துமாதவ, டுண்டிவினாயகர், தண்டபாணி, காலபைரவர், குகை, குகைகாசி, மணிகர்ணிக முதலானவற்றை தரிசித்து பூஜை செய்து, உன் பேரிலே ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய். இப்படிச் செய்தால் உனக்கு விசுவேச்வரரின் அருள் கிடைத்து உன் குருபக்தி திடம் பெற்று ஈசனின் தரிசனம் கிடைக்கும். அப்பொழுது நீ உன் குருவுக்குக் கொடுக்க வேண்டியதெல்லாம் செய்யலாம்" என்று கூறி அங்கிருந்து மறைந்தார். த்வஷ்டன் ஆச்சரியத்துடன் "ஆகா நான் ஈசனைப் பற்றி தவம் செய்யவில்லை. எனினும் என் குரு பக்தியினால் அந்த மகேசனே இந்த மகான் ரூபத்தில் எனக்குத் தரிசனம் தந்தார்" என்று எண்ணி மகான் சொன்னது போல காசியில் செய்ய வேண்டிய பூஜைகள் அனைத்தும் செய்து தன் பேரில் லிங்க பிரதிஷ்டையும் செய்து விசுவேசுவரரிடம் சென்று அவரைத் தியானம் செய்தார். உடனே விசுவநாத லிங்கத்தில் சங்கரர் தரிசனம் தந்து "உன் குரு பக்திக்கு உவந்தேன். என்ன வரம் வேண்டுமோ கேள்" என்றார். அவன் தன் குருவும், குடும்பத்தினரும் கேட்டதை எல்லாம் சொல்லி இவை எனக்குத் தர வேண்டும் என்று வேண்டினான். அவன் கேட்ட வரமளித்து சங்கரன் "அப்பனே உன் திட குரு பக்தியினால் நீ பெரும்புகழை அடைவாய். நீ விசுவகர்மா என்ற உலகை உருவாக்கக் கூடியவனாக ஆவாய்" என்று ஆசி கூறி மறைந்தார்.

த்வஷ்டன் சந்தோசமடைந்து குருவிடம் சென்று அவர்கள் கேட்டவற்றை உருவாக்கிக் கொடுத்தான். அதைப் பார்த்த குரு மிக சந்தோசமடைந்து "உனக்கு ஞானம், கல்வி, எல்லா



சித்திகளும் நவ (ஒன்பது) நிதிகளிலும் பெருமை கிடைக்கும். நீயும் உன் முன்னோரும் எல்லாச் செல்வமும் பெற்று பெரும் பெயருடன் நீண்ட காலம் வாழ்வீர்கள்" என்று ஆசி வழங்கினார் என்று ஸ்ரீகுரு சொல்லி முடிப்பதற்குள் விடிந்தது. இருள் நீங்கி வெளிச்சம் வந்தது. சாயம்தேவன் ஆனந்தப்பட்டு குரு பாதங்களை தொட்டு வணங்கி "தேவா எனக்குக் குருவின் மேல் அதேபோன்ற திடபக்தி இருக்க ஆசி வழங்குங்கள். மேலும் நீங்கள் காசி யாத்திரை பற்றி கூறிக் கொண்டிருக்கையில் நான் உங்களுடன் காசி யாத்திரை செய்தது போல் தென்பட்டது. அது கனவோ நனவோ தெரியவில்லை" என்று பக்தியுடன் வணங்கி குருவை துதிக்கலானான்.

1. உலகம் உருவெடுப்பதற்கு முன்பு ஒன்றானவனாய் இருந்து, உலகை உருவாக்கி அதை ஆள வந்தவனே வணங்குகின்றேன்.

2. கலியின் பிரபாவத்தால் தர்மம் நசிந்து யக்ஞ, யாகங்கள் செய்வது குறைந்த நேரத்தில் தேவர்களின் வேண்டுதலுக்கு சம்மதித்து பூமியில் அவதரித்து தர்மத்தை நிலைநாட்டியவனே வணங்குகின்றேன்.

3. ஊமைக்குப் பேச்சும், குருடனுக்கு பார்வையும், மலடிக்குப் பிள்ளைப்பேறும் 'காய்ந்த மரம் துளிர்க்க வைத்தது, விதவைக்கு சுமங்கலியமும், பக்தர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்த உங்கள் மகிமை அபாரம். உங்களை வணங்குகின்றேன்.

4. பாவத்தை, ஏழ்மையை அகற்றி உலகிற்கு ஞான ஒளி கொடுத்து காமதேனுவைப் போல் கல்பமரம் போல் பக்தர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து முக்தி கோருபவர்களுக்கு முக்தியையும் கொடுக்கும் உங்களை வணங்குகின்றேன்.

5. உங்கள் பாதகமலங்களை என்றும் நினைப்பவர்களுக்கு எல்லா நதிகளையும், சேத்திரங்களையும் பார்த்து, சேவித்த பலனும், அவைகளைத் தரிசனம் செய்தவர்களுக்கு ஆயிரமாயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பலனும் கொடுக்கும் உங்களை வணங்குகின்றேன்.

6. வேதங்களும் கூட உங்கள் நாம மகிமை தெரிந்து

கொள்ள முடியாதது. எல்லா உலகங்களுக்கும் அதிபதியான உங்கள் இரு பாதங்களை என் இதயக்கமலத்தில் வைத்து மனதார மீண்டும் வணக்கம் தெரிவித்து உங்களை வணங்குகின்றேன்.

7. நீங்கள் ஓம்கார ரூபன். ஐந்து பூதங்கள், சூரியன், சந்திரன், ஜீவாத்மா என்ற எட்டு ரூபங்களில் நீங்கள் விசுவரூபம் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களை வணங்குகின்றேன்.

8. இந்தக் கலியுகத்தில் பக்தர்களைக் காப்பாற்ற தண்டகம், கமண்டலம் ஏந்தி முனீசுவரன் ரூபத்தில் அவதரித்து பீம, அமரஜ நதிகளின் சங்கமத்தில் ஸ்ரீநரசிம்ம சரசுவதி என்ற பெயரால் குடி கொண்டிருந்து பக்தர்களுக்கு நான்கு வல்லமைகளையும் அளிக்கும் உங்களை துதிப்பதனால் என்னுள் இருக்கும் எல்லா தீமைகளை வென்று உங்களை வணங்குகின்றேன்.

9. குரு தோத்திரமான இந்த அஷ்டகத்தைத் தினமும் துதிப்பவருக்குப் பலம், செல்வம், நற்குணம், தெளிவு, பிள்ளைகள், பேரன்கள் பெற்று ஆயுள், ஆரோக்கியமும் பெற்று இவ்வுலகில் சுகத்துடன் வாழ்ந்து முக்தியும் பெறலாம். அப்படிப்பட்ட நரகேசரி ஸ்ரீநரசிம்ம சரசுவதி உங்களை வணங்குகின்றேன் என்றான்.

இதற்கு ஸ்ரீகுரு அவர்கள் சந்தோசமடைந்து "அப்பனே உனக்குக் காசி தரிசனம் கிடைத்ததில்லையா. இதனால் உன் முன்னோர்களும், உன் பின்னோர்களும் நற்கதி அடைவார்கள். இனி இங்கே இருந்து எங்கள் பாத சேவை செய்துகொள். அப்படிச் செய்ய வேண்டுமென்றால் அந்த முகம்மதீய மன்னரின் வேலையை விட்டு மனைவி பிள்ளைகளுடன் இங்கே வந்துவிடு" என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு மடத்திற்குத் திரும்பினார். சாயம்தேவன் ஊருக்குச் சென்று தன் மனைவி பிள்ளைகளை அழைத்துக் கொண்டு காணகாபுரம் வந்து ஸ்ரீகுருவுக்கு சாஷ்டாங்கமாக வணங்கி மெய்மறந்து கன்னட மொழியில் அவரை மீண்டும் இப்படி துதிக்கலானார்.

1. பூமியின் மேல் பக்தர்களின் பாக்கிய நிதியாக அவதரித்த ஸ்ரீ நரசிம்ம சரசுவதியைப் பார்த்தேன்.



2. பக்தியுடன் தியானிப்பவர்களுக்கு சுகத்தைக் கொடுக்கும் உலகநாதனின் பாதகமலங்களைத் தரிசிக்க முடிந்தது.

3. சம்சாரத்தில் தவிக்கும் பக்தர்களுக்கு வேண்டியதை அளிக்கும் மற்றும் யோகிகளுக்கு யோக சித்தியை தரும் ஸ்ரீநரசிம்ம சரசுவதியின் தரிசன பாக்கியம் கிடைத்தது.

4. பெரும் வாக்கியங்களாகச் சொன்ன வேறு தத்துவம் நற்குணமாகி நல்லோரை காப்பதற்காக தண்ட, கமண்டலத்தை ஏந்தி யதி சக்கரவர்த்தியாக அவதரித்த ஓ நரசிம்ம சரசுவதி உங்கள் தரிசனம் இன்று எனக்குக் கிடைத்தது.

5. பக்தர்களை ஆண்டு வருபவரும், தயா சமுத்திரனும் ஆன உங்கள் கால்கள் பட்டதினால் இந்தக் கந்தர்வபுரம் கைலாசமாயிற்று.

6. யதிகள் என்ற நட்சத்திரங்கள் நடுவில் சந்திரன் போல் ஒளிர்ந்து கொண்டிருக்கும் உங்கள் தரிசன பாக்கியம் இன்று எனக்கு கிடைத்தது. உங்கள் யதிரூபத்தில் பக்தர்களின் மகாபாக்கியம் உருவம் பெற்றது.

7. வேதாந்த தத்துவத்திற்கு நிகரான வரலாறை காண்பிக்கும் உங்கள் பாதங்களை இன்று காண முடிந்தது. பக்தர்களைக் காப்பாற்றுவதில் வேகம் கொண்ட தயாளுவே உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும்.

8. ஆனந்த் சமுத்திரம், சந்தன வாசனையுடன் சோபிக்கும் யோகிகளின் பிரியனான ஸ்ரீகிருஷ்ணனை உங்கள் ரூபத்தில் காண்கிறேன்.

9. முதலையிடமிருந்து யானைகள் மன்னனான கஜேந்திரனைக் காத்த ஸ்ரீமகாவிஷ்ணுவே இயற்கை (பெண், ஆண்) என்ற பேதமில்லாத நரசிம்ம சரசுவதி என்ற பெயருடன் ஜகத்குரு ரூபத்தில் நடமாடிக் கொண்டிருக்கும் உங்களைக் கண்டேன்.

இதைக்கேட்ட ஸ்ரீகுரு சந்தோசமடைந்து அவரையும், மனைவி, மக்களையும் தன் அருகில் உட்கார வைத்துக்கொண்டு அவர்களின்

நலம் விசாரித்தார். சாயம்தேவன் அவர்களை சுவாமி அவர்களுக்கு அறிமுகம் செய்தார். பிறகு தன் இரு மகன்களை அவர் பாதங்களை தொட்டு வணங்கச் செய்தார். சுவாமி அவர்களின் தலையில் தன் கை வைத்து ஆசி வழங்கி மூத்த மகன் நாகநாதனை பார்த்து "இவன் நீண்ட ஆயுள் பெற்று செல்வந்தனாய் வாழ்வான். இவன் பெயர், புகழுடன் வாழ்வான். இனிமேல் முகம்மதீய மன்னரின் வேலையை விட்டு இங்கே என் சேவை செய்து கொண்டு இருங்கள். என் அனுக்கிரகத்தினால் உங்கள் வம்சம் மேலோங்கி புகழ்பெறும். நீங்கள் எல்லோரும் சங்கமத்தில் நீராடி அரச மரத்திற்கு பூஜை செய்து வாருங்கள்" என்று கூறினார். சாயம்தேவனும் அப்படியே செய்து ஸ்ரீகுருவிடம் வந்தார். அன்று பாத்திரபத மாதம் வளர்பிறை சதுர்த்தசி ஆனதால் பக்தர்களெல்லாம் குருமூர்த்தியிடம் வந்து அவரையே அனந்த ரூபமாக நினைத்து பூஜை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது குருமூர்த்தி சாயம்தேவனிடம் "இன்று அனந்தவிரதம் செய்யும் நாள், பக்தர்களெல்லாம் அனந்தனை பூஜிக்கிறார்கள். நீயும் இன்று அனந்த விரதத்தைச் செய்" என்றார்.

அதற்கு சாயம்தேவன் "தேவா நீங்கள் தான் எங்களுக்கு அனந்தன். உங்கள் பாத சேவையே எங்களுக்கு அனந்த விரதம். ஆகையால் வேறு அனந்த விரதமெதற்கு" என்றார். சுவாமி "மகனே அப்படிச் சொல்லாதே. என் பேச்சைக் கேட்டு விரதம் செய். முன்பு கௌன்டின்யர் என்ற ருஷி இந்த விரதத்தைச் செய்து பெரும் புண்ணியத்தையும், புகழையும் பெற்றார். நீயும் அந்த கௌண்டின்ய கோத்திரர் ஆனதால் விரதத்தைச் செய்து நன்மையடை" என்று சொன்னார். "உங்கள் சொல்படி செய்கிறேன். சுவாமி முன்பு அந்த விரதத்தை செய்து நன்மையடைந்தவர்கள் பற்றி கூறி அந்த விரதத்தை எப்படி செய்ய வேண்டுமென்று கூறுங்கள்" என்று வேண்டினான்.









## அத்தியாயம் 43

ஸ்ரீகுரு சாயம்தேவனிடம் "இந்த அனந்தவிரதம் செய்ததினால் கபட ஜூதத்தில் தோல்வியடைந்து நாட்டை இழந்து காட்டிற்குச் சென்ற பாண்டவர்கள் மீண்டும் அரசைப் பெற்றார்கள்.

ஜூதத்தில் தோல்வியுற்று தர்மராஜன் தம்பிமார்களுடன், திரௌபதியுடனும் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அங்கு அவர்கள் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தும் கிருஷ்ணனை மறக்காமல் பூஜை செய்து கொண்டிருந்தார்கள்.

பாண்டவர்களை காட்டிற்கு அனுப்பியும் திருப்தி அடையாமல் துரியோதனன் அவர்களுக்கு இன்னல்களைக் கொடுக்க துருவாசரை அனுப்பி வைத்தார். தன் பக்தர்கள் படும் இன்னல்களை தீர்க்கும் கண்ணபெருமான், பாண்டவர்களின் துன்பத்தைத் தீர்க்க அவர்களிடம் சென்றார். பாண்டவர்கள் அவரை வரவேற்று பாத பூஜை செய்தார்கள். அப்பொழுது தர்மராஜன் கண்ணனிடம் "சுவாமி நீங்கள் தீயவர்களை தண்டித்து நல்லோரைக் காப்பாற்ற அவதாரமெடுத்தீர்கள். நாங்கள் உங்கள் பக்தர்களும், மிக்க வேண்டியவருமாயிருந்தும் இங்கு காட்டில் துன்பங்களையும், இன்னல்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். நீங்கள் கைவிட்டால் எங்களை யார்தான் காப்பாற்றுவார்கள்" என்று வேண்டினார்கள். கண்ணபெருமான் அவர்களை கருணித்து அவர்களிடம் "நான்தான் அனந்தன். உலகு முழுவதும் வியாபித்து இருப்பவன். மும்மூர்த்திகளும் பதினான்கு உலகங்களும், சூரியன், சந்திரன், எல்லா தேவர்களும் நட்சத்திர மண்டலமும் என்னுள் அடங்கியுள்ளன. ஆகையால் என்னை அனந்தன் என்பார்கள். என்னை அனந்தனாக பாவித்து சிரத்தையுடன் விரதம் செய்தால் நீங்கள் வேண்டியதெல்லாம் கிடைக்கும். உங்கள் துன்பங்கள் தீர்ந்துவிடும். இந்த விரதம் சந்திரன் ஆதாரமாகக் கொண்ட பஞ்சாகப்படி பாத்திரபத மாதம் வளர்பிறை சதுர்த்தசி அன்று மத்தியான நேரத்தில் பக்தியுடன்

செய்தால் அவரவர் வேண்டியது நிறைவேறும்.

முன்பு இந்த விரதம் செய்து சுகம் பெற்ற கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். கிரத யுகத்தில் வசிஷ்ட கோத்திரத்தில் சுமந்தன் என்ற நற்பிராமணர் இருந்தார். அவருக்கு சுசீலை என்ற பெண் குழந்தை பிறந்த சிலநாட்களிலேயே மனைவி இறந்துவிட்டாள். சுசீலா தகப்பனாரிடம் வளர்ந்து கொண்டிருந்தாள். சிறு குழந்தையாகிலும் பக்தியுடன் பூஜைகள் செய்து கொண்டிருந்தாள். மனைவி இல்லாமல் யக்ஞங்கள், யாகங்கள் செய்ய முடியாததினால் சுமந்தன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். பாவம் சுமந்தனின் விதி. அவள் ஒரு வாயாடி. எப்பொழுதும் கணவனுடனும், சுசீலையுடனும் சண்டை போட்டுக் கொண்டு திட்டிக் கொண்டும் இருப்பாள். சில நாட்கள் கழித்து சசீலைக்கு வேதங்களைப் படித்த கௌன்டியனுக்குத் திருமணம் செய்து வைத்தான். சுமந்தன் மகள் மேலிருந்த அன்பினால் மாப்பிள்ளையை வீட்டோட மாப்பிள்ளையாக வைத்துக் கொண்டார். ஆனால் சுமந்தனின் இரண்டாவது மனைவி அவர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த கௌண்டின்யன் மாமனாரிடம் "நாங்கள் இருவரும் இங்கிருந்து சென்று வேறு ஊரில் குடியமர்ந்து கொள்வோம்" என்று வேண்டினான். சுமந்தனுக்குத் தன் மகள் தனியாக செல்வது விருப்பமில்லை. தன் மனைவியின் கொடுமைகளிலிருந்து தப்பிக்க இதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ஆகையால் அதற்கு சம்மதித்து ஒரு நல்ல நாளில் அவர்கள் செல்ல சம்மதித்தார். அவர்கள் வீடு விட்டு செல்லும் பொழுது வழியில் சாப்பிடுவதற்காக ஏதாவது கொடுக்கச் சொல்லி மனைவியைக் கேட்டார். அவள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு அவளுக்குத் தெரியாமல் சிறிது கோதுமை மாவை ஒரு துணியில் மூட்டைக் கட்டி கொடுத்தார்.

கௌண்டின்யனும், சுசீலையும் சுமந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள். மறுநாள் மதிய நேரத்திற்குள் அவர்கள் ஓர் நதிக்கரைக்கு வந்தார்கள். அங்கு குளித்து சந்தியாவந்தனம்



செய்ய முற்பட்டான் கௌண்டின்யன். அந்த நேரத்தில் அங்கே சில பெண்கள் சிகப்பு நிறப் புடவைகள் கட்டிக் கலசங்களை வைத்து பூஜை செய்து கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த சுசீலா அவர்களிடம் விசாரித்த போது அவர்கள் அனந்தவிரதம் செய்கின்றோம் என்று கூறினார்கள். அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று சுசிலா கேட்டதற்கு ஒரு சுமங்கலி அந்த விரதம் எப்படிச் செய்வதென்று சொல்லலானாள்.

பாத்திரபத மாதம் வளர்பிறை சதுர்த்தி தியன்று இந்த விரதத்தைச் செய்ய வேண்டும். பதினான்கு முடிகள் போட்ட சிகப்பு நிற நூலை தயார் செய்து கொண்டு நதியில் நீராடிச் சிகப்பு நிறப் புடவையைக் கட்டிக் கொண்டு முதலில் தயார் செய்து கொண்ட நூல் தோரணத்தை வலது கையில் கட்டிக்கொள்ள வேண்டும். இந்தத் தோரணம் அடுத்த வருடம் வரை கையில் இருக்க வைத்து மீண்டும் விரதம் செய்யும் அன்று இதை அவிழ்த்து புதுத் தோரணத்தைக் கட்டிக் கொள்ள வேண்டும். ஒரு சொம்பில் நீரை நிரப்பி அதில் மா இலைகளை போட்டு சந்தனத்தினால் ஓர் புதுத் துணியின் மேல் தாமரைப்பூவை வரைந்து சொம்பை துணியின்மேல் வைக்க வேண்டும். பிறகு தர்ப்பையினால் பாம்பு போல் ஒன்றைச் செய்து கலசத்தின் மேல் வைக்க வேண்டும். பிறகு சேஷசயனியான நான்கு புஜங்கள் கொண்ட ஸ்ரீமகாவிஷ்ணுவை அனந்தனாகப் பாவித்து அவரை அந்தக் கலசத்தில் இருக்கிறார் என்று நினைத்து பூஜை செய்ய வேண்டும். பிறகு கோதுமையினால் செய்த பண்டங்களைப் படைத்து ஒரு வேதம் தெரிந்த பிராமணருக்கு தன் சக்திக்குத் தகுந்தாற்போல் தட்சிணையுடன் தானம் செய்ய வேண்டும். இப்படிப் பதினான்கு வருடங்கள் பதினான்கு கலசங்களைத் தானம் செய்தால் எல்லா வளமும் பெற்று சுகமுடன் வாழ்வார்கள். ஆகையால் நீயும் இன்று இங்கே இந்த விரதத்தைச் செய்ய முற்படு என்றாள். சுசீலையும் அங்கே அனந்த விரதத்தை செய்து அங்கிருந்து புறப்பட்டார்கள். அப்படிச் செல்கையில் வழியில் ஓர் பட்டினத்தில் அவர்களைப் பார்த்து 'இங்கே பூஜைகள் செய்ய

பிராமணர் யாருமில்லை. ஆகையால் நீங்கள் எங்கள் ஊரில் தங்குங்கள்' என்று வேண்டினார்கள். அந்த விரத மகிமையினால் திக்குத் தெரியாத தங்களுக்கு இப்படி ஒரு நிழல் கிடைத்ததற்கு சந்தோஷமடைந்து அந்தப் பிராமண தம்பதிகள் அங்கே இருந்து கொண்டு செல்வந்தனாய் சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் கௌண்டின்யன் மனைவி கையிலிருந்த அந்த விரத தோரணத்தைப் பார்த்து "இதென்ன சிகப்புக் கயிறு. நீ என்னை வசப்படுத்திக் கொள்ளக் கட்டிக் கொண்டாயா?" என்று கேட்டான். சுசீலா "இது அனந்த விரதத் தோரணமென்றும் அந்த விரதம் செய்து இதைக் கட்டியதால்தான் நமக்கு இந்தச் செல்வமும், சுகமும் கிடைத்தது" என்று சொன்னாள்,, ஆனால் அவள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவன் அந்தத் தோரணத்தை பிடுங்கி நெருப்பில் போட்டான். அதனால் அவனுக்கு மீண்டும் கெட்ட நேரம் வந்து திருடர்கள் வீட்டிலுள்ள எல்லாவற்றையும் எடுத்துச் சென்று விட்டார்கள். அப்பொழுது தனக்குத் திடீரென வந்த இன்னல்களுக்குக் காரணம் அனந்தனை நிந்தனை செய்ததினால்தான் என்று தெரிந்து கொண்டு, அவரைப் பார்த்துச் சரணடையும் வரை நீர், ஆகாரம் இல்லாமல் இருப்பேனென்று எண்ணி அனந்தனைக் காணச் சென்றான். அவன் அனந்தன் எங்கே என்று கத்திக்கொண்டு காட்டுக்குள் ஓடிக் கொண்டிருந்தான். வழியில் பூவும் பூக்காமல், காயும் காய்க்காமல் இருந்த மாமரத்தைப் பார்த்தான். அதிசயமாக அதன் மேல் ஒரு பறவை கூடக் காணவில்லை. அந்த மரத்திடம் 'அனந்தன்' எங்கிருக்கிறார் என்று கேட்டதற்கு அது எனக்குத் தெரியாது என்று கூறி, அவரைப் பார்த்தால் அவரிடம் என்னைப் பற்றி தெரிவியுங்கள் என்றது. அவன் சற்றுத் தொலைவு போகையில் அங்கு புல் நிறைந்த வயலில் ஒரு பசுவும், கன்றும் புல்லைத் தின்னாமல் மெலிந்து நின்று கொண்டிருந்ததைப் பார்த்து அதையும் அனந்தன் எங்கே என்று கேட்டான். அந்தப் பசுவும் எனக்குத் தெரியாது. அவரைப் பார்த்தால் நான் புல் வயலிலிருந்தும் புல்லைத் தின்ன முடியாத என் நிலையை அவரிடம் கூறுங்கள்



என்றது. இன்னொரு இடத்தில் அப்படியே இருந்த எருதைப் பார்த்து அதையும் அனந்தன் எங்கே என்று கேட்டான். அதுவும் முன்சொன்னது போல் சொன்னது. சற்று தொலைவு சென்றால் அங்கே இரண்டு குளங்களைப் பார்த்தான். இரு குளங்களிலிருந்த தண்ணீர் ஒன்றிலிருந்து ஒன்றிற்கு போய்க் கொண்டிருந்தன. ஆனால் அந்தக் குளங்கலருகில் ஒரு கொக்கும் காணப்படவில்லை. அவற்றிடமும் அனந்தனைப் பற்றி கேட்க அவையும் தெரியாது என்று சொல்லின. பிறகு ஒரு கழுதையும் யானையும் காண அவையும் தங்களுக்கு அனந்தன் எங்கும் தென்படவில்லை என்று கூறின. அப்பொழுது கௌண்டின்யன் அனந்தனின் தரிசனம் கிடைக்காததால் மனம் துவண்டு வேதனையில் அங்கே உட்கார்ந்தான். அப்பொழுது பக்தவத்சலனான அனந்தரே ஓர் முதியவர் வேடத்தில் அங்கு வந்து அவனை எழுப்பி 'கவலைப்படாதே அனந்தனை காண்பிக்கிறேன் வா' என்று கையைப் பிடித்துக்கொண்டு சென்று ஓர் அழகான நகரத்திற்குக் கூட்டிச் சென்று அரச மாளிகைக்குள் சென்று ரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த பகவான் அனந்தனைக் காண்பித்தார். அவரின் அற்புத சொரூபத்தைப் பார்த்து மனமுருகி அவரின் பாதங்கள் மேல் விழுந்து வணங்கி அவரைத் துதித்தார். அப்பொழுது அனந்தன் அவனை ஆசிர்வதித்து எல்லா வளமும் பெற்று சுகத்துடன் நீடுழி வாழ்வாய் என்று ஆசி வழங்கினார்.

அப்பொழுது கௌண்டின்யன் அனந்தனைப் பார்த்துத் தான் காட்டில் பார்த்த விந்தைகள் பற்றி தெரிவித்து அவை ஏன் அப்படி இருக்கின்றன என்று கேட்டான். அதற்கு திருமால் "ஓர் பிராமணன் வேதங்களை, சாஸ்திரங்களைக் கற்று அவற்றை யாருக்கும் சொல்லிக் கொடுக்காமல் இருந்ததினால் இந்தப் பிறவியில் யாருக்கும் உபயோகப்படாத மாமரமாகினான். சவுட்டு நிலத்தைத் தானம் செய்ததினால் புல்லைத் தின்னமுடியாத பசுவாகப் பிறந்தான். செல்வந்தனாகியும் யாருக்கும் தானம் செய்யாததால் அவர் எருதாகினார். ஒருத்தருக்கொருத்தர் தானம் செய்த சகோதரிகள் குளங்களாக ஆயின. கோபம் கொண்டு

வாழ்ந்தவன் கழுதையாக, மதம் பிடித்து தன்னிச்சையாகத் திரிந்தவன் யானையாகப் பிறந்தார்கள். உன் தவறை நீ உணர்ந்து என்னைக் காண வேண்டுமென்ற ஆவலுடன் என்னைத் தேடி வந்த உன்னைக் காப்பாற்றவே நான் தான் பிராமண வேடத்தில் உன்னிடம் வந்தேன். நீ பார்த்த அவற்றுக்கெல்லாம் உன் மீதுள்ள கருணையினால் முக்தி அளித்தேன். ஆகையால் நீ மரணமடைந்த பிறகு புனர்பூசம் நட்சத்திரமாகி விண்வெளியில் இருப்பாய் என்றார்."

திரு. கண்ணன் சொன்ன இந்தக் கதையைக் கேட்ட தர்மராஜா அவர்கள் அனந்த விரதத்தைச் செய்து அதன் மகிமையினால் போரில் கௌரவர்களை வென்று மீண்டும் அரசாண்டார், ஆகையால் சாயம்தேவா நீயும் இந்த விரதத்தைச் செய்" என்றார்.

ஸ்ரீகுரு சொன்னபடியே சாயம்தேவனும் அவன் மகனான நாகதேவனும் இந்த விரதத்தைச் செய்தார்கள். அன்று முதல் கானகாபுரத்திலேயே தன் குடும்பத்தை இருக்கச் செய்து சாயம்தேவன் நித்தமும் மடத்தில் குரு சேவை செய்து கொண்டிருந்தார். அப்படிப்பட்ட பக்தனின் வம்சத்தில் நீ பிறந்ததினாலேயே நீயும் குருவின் கடாட்சத்தைப் பெற்றாய் என்று சித்தமுனி சொன்னார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 44

நாமதாரகன் சித்தமுனியிடம் மேலும் என்ன நடந்தது கூறுங்கள் என்றான். கானகாபுரத்தில் தந்துகன் என்ற நெசவாளர் இருந்தான். அவன் தினமும் காலையில் மடத்தைப் பெருக்கி தண்ணி தெளித்துக் கோலங்கள் போட்டு தூரத்திலிருந்தே சுவாமியை வணங்கிச் சென்று தன் வேலைகளைச் செய்து கொண்டிருப்பான். அப்படி இருக்கையில் ஓர் சிவராத்திரிக்கு முன் அவன் உறவினர்களெல்லாம் ஸ்ரீசைலத்திற்குச் செல்ல முற்பட்டு அவனையும் அழைத்தார்கள். அதற்கு அவன் அந்த ஸ்ரீசைல மல்லிகார்ஜுனர் இங்கேயே குரு ரூபத்தில் இருக்க வீணாக அங்கு ஏன் போக வேண்டும். ஆகையால் நான் வரமாட்டேன் என்றான். இவன் ஒன்றும் தெரியாத மூடன் என்று நினைத்து உறவினர்கள் எல்லோரும் ஸ்ரீசைலம் சென்றுவிட்டார்கள். தந்துகன் என்றும்போல் மடத்திற்கு வந்தவுடன் ஸ்ரீகுரு அவனைப் பார்த்து "ஏனப்பா உன் உறவினர்களெல்லாம் சிவராத்திரிக்கு ஸ்ரீசைலம் செல்கிறார்களே நீ ஏன் செல்லவில்லை" என்று கேட்டார். அவன் "தேவா என் உறவினர்கள் மூடத்தினால் அங்கே இருக்கும் ஓர் கல்லைப் பார்க்கச் சென்றார்கள். உங்கள் பாதங்களில் இல்லாத சேத்திரமேது." என்று கூறி குருவை வணங்கி அவன் வேலையைச் செய்து வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

சில நாட்களுக்குப் பிறகு சிவராத்தரி வந்தது. அன்று தந்துகன் உண்ணாவிரதம் இருக்க நினைத்து சங்கமத்திற்குச் சென்று அங்கு நீராடி ஸ்ரீகுருவைப் பார்த்து வணங்கி அவர் அருகில் உட்கார்ந்தான். அப்பொழுது சுவாமி "அப்பனே உன் உறவுக்காரர்களெல்லாம் மல்லிகார்ஜுனரை தரிசிக்க ஸ்ரீசைலம் சென்றிருக்கிறார்கள் போலும். நீ மட்டும் இங்கே இருக்கிறாய். இதற்கு முன்பு என்றாவது ஸ்ரீசைலம் போய் இருக்கிறாயா?" என்று கேட்டார். அவன் சுவாமி உங்கள் பாதங்கள் தவிர வேறு ஏதும் எனக்குத் தெரியாது. உங்கள் பாதங்களிலேதான்

நான் எல்லாச் சேத்திரங்களையும் காண்கிறேன்" என்று கூறினான். அவன் பக்திக்கு சந்தோஷப்பட்டு "அப்படியானால் உன்னை ஸ்ரீசைலம் கொண்டு செல்கிறேன். கண்களை மூடிக்கொண்டு என் பாதங்களை பிடித்துக்கொள்" என்று சொன்னார். அவனும் அப்படியே செய்தான். ஒரு நொடியில் சுவாமியும் அவனும் ஸ்ரீசைலத்திலுள்ள பாதாள கங்கை அருகே சென்று அவனைக் கண்களை திறக்கச் சொன்னார். அவன் கண்களைத் திறந்து பார்க்கையில் திரளாக மக்கள் கூடி இருந்ததைப் பார்த்து திகைப்புடன் சுவாமியைப் பார்த்தான். சுவாமி "இதுதான் ஸ்ரீசைலம். நான் இங்கேயே இருப்பேன். நீ போய் மொட்டை அடித்துக்கொண்டு குளித்து ஸ்ரீமல்லிகார்ஜுனரை சேவித்து வா" என்று சொல்லியனுப்பினார்.

தந்துகன் ஸ்ரீகுரு சொன்னது போல் செய்து சந்தனம், பூ முதலியவை எடுத்துக்கொண்டு மல்லிகார்ஜுனரை தரிசிப்பதற்காக சன்னிதானத்திற்குச் செல்லும் பொழுது ஊர்க்காரர்கள் அவனைப் பார்த்து அவனிடம் நாங்கள் கூப்பிடும் பொழுது வராமல் இப்பொழுது எப்படி வந்தாய் என்று கேட்டார்கள். அதற்கு அவன் "இன்று காலையில் நான் சங்கமத்தில் குளித்து ஸ்ரீகுருவிடம் சென்றேன். அவர்தான் என்னை நொடிப்பொழுதில் இங்கு கொண்டு வந்து சேர்த்தார்" என்று சொல்ல அதில் சிலர் இவன் பொய் சொல்கிறான். நம் பின்னாலேயே வந்திருக்கிறான் என்று நினைத்தார்கள். அவன் பூஜை செய்வதற்காக மல்லிகார்ஜுனர் ஆலயத்தினுள் சென்ற பொழுது அவனுக்கு அங்கே சிவலிங்கத்திற்குப் பதிலாக குருமூர்த்தியே தென்பட்டார். அங்கே பக்தர்கள் செய்யும் பூஜைகளெல்லாம் ஸ்ரீகுருவிற்கே செய்வது போல தென்பட்டது. அதைப் பார்த்த தந்துகன் ஸ்ரீகுருதான் அந்த சங்கரன் என்று எண்ணி மல்லிகார்ஜுனரை பூஜை செய்து மிக்க சந்தோஷத்துடன் ஸ்ரீகுருவிடம் வந்தான். ஸ்ரீகுரு அவனிடம் "நீ சில நேரம் இங்கே இருந்து உன் உறவினர்களுடன் வருவாயா? இல்லை என்னுடன் வருவாயா" என்றார். அவன் "தேவா மல்லிகார்ஜுன சந்நிதியில் நான் ஒரு



விந்தையைப் பார்த்தேன். அங்கே மல்லிகார்ஜுனருக்குப் பதிலாக நீங்கள் இருந்து பக்தர்கள் செய்யும் பூஜைகளைப் பெற்றுக் கொண்டிருந்தீர்கள். பக்கத்திலிருக்கும் உங்களைத் தெரிந்து கொள்ளாமல் மூடர்கள் இவ்வளவு தூரம் ஏன் வருகிறார்களோ புரியவில்லை என, குருமூர்த்தி அவனிடம் "ஈசன் உலகமெல்லாம் ஒருவராக இருக்கிறார். ஆனால் தலத்தின் விசேஷத்தைப் பொறுத்து அதன் பெருமை இருக்கும்" என்று கூற அப்படியானால் இந்தத் தலத்தின் மகிமையை எனக்கு கூறுங்கள் என்று வேண்டினான்.

"தந்துகா மகா சிவராத்திரி அன்று சிவ சேத்திரத்தில் எவ்வளவோ மகிமை இருக்கிறது. முன்பு கிராத நாட்டை விமர்ஷன் என்ற அரசர் ஆண்டு கொண்டிருந்தார். அவன் சிவன் பக்தனாக இருந்தும் நல்லது, தீயது என்ற பேதமில்லாமல் இந்திரிய சுகங்களை அனுபவித்துக் கொண்டும், பெண் பித்தனாகவும் இருந்தான். அப்படி இருந்தும் வேலை தவறாமல் சிரத்தையுடன் லிங்கார்ச்சனை செய்தும், ஈசனைப் பாடி ஆடி அவரின் சேவை செய்து வந்தான். அவன் மனைவி குமுதவதி நல்ல குணமுடையவள். அவள் தன் கணவர் தீயவராக இருந்தும் வேலை தவறாமல் மிக பக்தியுடன் ஈசனை ஆராதிக்கிறார். இதற்கு என்ன காரணமோ அவரையே கேட்டு தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைத்து ஒருநாள் தன் கணவரிடம் "நான் உங்களை ஒரு கேள்வி கேட்பேன். தவறாக எண்ணாமல் பதிலைச் சொல்லுங்கள். உணவிலும் நடத்தையிலும் எந்தவிதமான கோட்பாடும் இல்லாமல் இருக்கும் நீங்கள் எப்படி ஈசனிடம் இப்படி ஒரு திடமான பக்தி கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டாள்.

அதற்கு மன்னர் சிரித்து "என் பிரியமானவளே! எனக்கு முற்பிறவியின் ஞானம் இருக்கிறது. அதைச் சொன்னால்தான் உன் சந்தேகம் தீரும். நான் முற்பிறவியில் ஓர் யாதவர் வீட்டில் நாயாக பிறந்து வளர்ந்தேன். ஒரு மகாசிவராத்திரி அன்று என் எஜமானர் வீட்டில் உண்ணாவிரதமிருந்தார்கள். ஆகையால் எனக்கு உணவு கிடைக்கவில்லை. உணவைத் தேடி மக்கள் கூடி இருந்த சிவன் கோயிலிடம் வந்தேன். எனக்கு உணவு

ஏதாவது கிடைக்குமென்று நினைத்துக் கோவிலுக்குள் சென்றேன். அங்கு திரிந்து கொண்டிருந்த என்னைப் பார்த்தவர்கள் நாய் கோவிலுக்குள் வந்துவிட்டதென்று சொல்லி என்னை விரட்டினார்கள். நான் அவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக உள்ளே மூன்று முறை வலம் வந்தேன். அப்பொழுது சிலர் என்னை அடிக்க வந்தார்கள். அவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக மூலவர் சன்னதிக்குள் நுழைந்தேன். அப்படி மகாசிவராத்திரி அன்று ஈசனை தரிசித்தேன். பிறகு அவர்கள் கதவை மூடி கோயில் உள்ளேயே என்னை சாகடித்தார்கள். அப்படி மகாசிவராத்திரி அன்று ஏதும் உணவு கிடைக்காமல் உண்ணாவிரதம் இருந்து கோயினுள்ளே மூன்று முறை வலம் வந்து ஈசனைத் தரிசித்து அன்றே இறந்த புண்ணியத்தால் இந்தப் பிறவியில் மன்னனாகப் பிறந்து ஈசன் வழிபாட்டில் ஆர்வம் கொண்டிருக்கிறேன். ஆனாலும் முற்பிறவியில் நாயாக இருந்ததினால் இப்பிறவியில் அந்த நாய் புத்தி என்னை விடவில்லை. என் இப்பொழுது நடத்தைத் தவறானது என்று தெரிந்திருந்தாலும் அதை மாற்றிக்காள்ள இயலவில்லை" என்றார். அதைக்கேட்ட அரசி "மன்னா சிவன் அனுக்கிரகத்தால் ஞானம் பெற்றவர் ஆனதினால் உங்களுக்கு முக்காலங்களும் தெரிந்திருக்கிறது. தயவுடன் என் முற்காலத்தைப் பற்றி கூறுங்கள்" என்று வேண்டினாள்.

விமர்ஷனர் சிரித்து "இனியவளே! முன்பு நீ ஸ்ரீசைலத்தில் பெண் புறாவாக இருந்தாய். ஒருநாள் நீ இறைச்சித் துண்டு ஒன்றை மூக்கில் கவ்விக் கொண்டு போகையில் கழுகு ஒன்று பார்த்து அந்த இறச்சியைப் பிடுங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் உன்னைத் துரத்தியது. நீ அதனிடமிருந்து தப்பிக்கக் கோயில் கோபுரத்தை மூன்று முறை வலம் வந்து அதன் மேல் உட்கார்ந்தாய். அப்பொழுது கழுகு வந்து உன்னை சாகடித்தது. சிவாலயத்தை மூன்று முறை வலம் வந்து ஆலயத்திலேயே இறந்ததினால் இப்பிறவியில் சிவபக்தனான எனக்கு மனைவி ஆகி அரசி ஆனாய்" என்றான். அதைக்கேட்ட அரசி "நாதா! இன்று முதல் நான் இன்னும் பக்தியுடன் ஈசனை பூஜை



செய்வேன். மேலும் வரும் பிறவியில் நடக்க இருப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று உங்களை வேண்டுகிறேன்" என்றாள்.

"பிரிய சகியே! நான் சிந்து நாட்டின் அரசகுமாரனாக பிறப்பேன். நீ ஸ்ருன்ஜய நாட்டின் அரச குமரியாகப் பிறந்து என்னை மணந்து கொள்வாய். பிறகு நான் சௌராஷ்ட்ர நாட்டின் அரச மகனாய்ப் பிறந்து களிங்க நாட்டின் அரச மகளாகப் பிறந்த உன்னை மணப்பேன். அடுத்த பிறவியில் நான் காந்தார நாட்டின் அரச குமாரனாய் பிறந்து மகத நாட்டு அரச மகளாய் பிறந்த உன்னை மணப்பேன். அடுத்த பிறவியில் அவந்தி நாட்டின் அரசனான என்னை தசார்ண அரசகுமாரியாக பிறந்து மணப்பாய். அடுத்த பிறவியில் அனந்தன் என்ற மன்னனாக பிறப்பேன். நீ யயாதி வம்சத்தில் பிறந்து என் ராணி ஆவாய். அடுத்த பிறவியில் பாண்டிய நாட்டின் அரசனாகப் பிறப்பேன். என் பெயர் பத்மவர்ணன். நீ விதர்ப நாட்டின் அரசவையில் சுமதியாக பிறந்து சுயம்வரத்தில் என்னை மணப்பாய். அந்தப் பிறவியில் நாம் யக்ஞங்கள், யாகங்கள், தான, தர்மங்கள் செய்து தேவதைகளையும், பிராமணர்களையும் பூஜை செய்து கொண்டு வயதான சமயத்தில் அகத்திய முனிவரால் துறவிகளாகி இறந்த பின் முக்தி அடைவோம். இதெல்லாம் நம்முடைய சிவபக்தியினால் நடப்பது. ஆகையால் நாம் ஸ்ரீசைலம் சென்று மல்லிகார்ஜுனரை பூஜை செய்து வருவோம்" என்றார். தந்துகா சேத்திர மகிமை பார்த்தாயா. அதன் மகிமையினால் ஒரு நாயும், புறாவும் அரசர்களாக பிறந்து முக்தியை பெற்றார்கள். நீ இனி சிவனை ஆராதனை செய். கந்தர்வபுரத்தில் இந்த மல்லிகார்ஜுனருக்குச் சமமான கல்லேச்வரன் இருக்கிறார். நீ அவரை அராதனை செய்" என்றார். தந்துகன் "சவாமி, நீங்கள் ஏன் இப்படி கூறுகிறீர்களோ தெரியவில்லை. எனக்கு மல்லிகாஜுனர் இடத்தில் நீங்கள்தான் தரிசனம் கொடுத்தீர்கள். எங்கும் நிறைந்தவனும், பரஞ்ஜோதி சொரூபமாக இருக்கும் உங்களைச் சரணடைந்த என்னை ஏன் சிவபூஜை செய்யச் சொல்கிறீர்கள். நீங்கள் அன்றி வேறு தெய்வமில்லை" என்று சொல்லி அவர் பாதங்களைத்

தொட்டு வணங்கினான். ஸ்ரீகுரு "சரி அப்படியே ஆகட்டும். நீ கண்களை மூடிக்கொண்டு என் பாதங்களை பிடித்துக்கொள். நாம் சங்கமத்திற்குச் செல்வோம்" என்று சொல்ல நொடிப்பொழுதில் சங்கமத்தை வந்தடைந்தார்கள்.

இந்த சமயத்தில் கானகாபுரவாசிகள் எல்லோரும் சிவராத்திரி அன்று சுவாமியைத் தரசிக்க வேண்டுமென்ற நோக்குடன் மடத்திற்கும் சங்கமத்திற்கும் வந்து பார்த்தபொழுது ஸ்ரீகுரு காணாததினால் வேதனையுடன் வீடு திரும்பினார்கள். சங்கமத்தில் ஸ்ரீகுரு இதைத் தெரிந்து கொண்டு தந்துகனை ஊருக்குள் அனுப்பி எல்லோரையும் வரவழைத்தார். அவனைப் பார்த்த அவர்கள் நீ எங்கே சென்றாய்? மொட்டை எங்கே அடித்தாய் என்று கேட்டார்கள். தந்துகன் நான் ஸ்ரீகுருவுடன் ஸ்ரீசைலம் சென்று வந்தேன். இதோ அங்கிருந்து கொண்டு வந்த பூக்களும் பிரசாதமும் என்று சொன்னான். நீ காலையில் இங்கே இருந்தாய். அதற்குள் எப்படி ஸ்ரீசைலம் சென்று வர முடியும் என்றார்கள். அதற்கு அவன் ஸ்ரீகுருதான் நொடிப்பொழுதில் ஸ்ரீசைலம் கொண்டுபோய் திரும்பக் கொண்டு வந்தார் என்றான். எல்லோரும் ஆனந்தமாக ஸ்ரீகுருவைப் பூஜித்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு ஸ்ரீசைலம் சென்ற ஊர்க்காரர்கள் திரும்பி வந்து தந்துகனை ஸ்ரீசைலத்தில் பார்த்தது பற்றி கூறுகையில் அதுவரையில் தந்துகனின் பேச்சை நம்பாதவர்கள் அவன் சொன்னது உண்மை என்று நம்பி ஸ்ரீகுருவின் பெருமையைப் புகழந்தார்கள். இப்படிப்பட்ட குரு மகிமையை அமிர்தமென்று நினைத்து யார் பருகுவார்களோ அவர்கள் குருவின் கிருபையைப் பெறுவார்கள் என்று சித்தமுனி நாமதாரகனிடம் சொன்னார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





*திகம்பரா திகம்பரா ஸ்ரீபாதவல்லப திகம்பரா!*

## அத்தியாயம் 45

நாமதாரகன் சித்த முனியிடம் "மும்மூத்திகளின் அவதாரமான ஸ்ரீகுருவின் லீலைகள் நேராகப் பார்த்த உங்கள் புண்ணியம் அபாரமானது. உங்களிடமிருந்து இந்த ஸ்ரீகுரு சரித்திரம் கேட்பதினால் என் ஜன்மம் மேன்மையடைந்தது. மேலும் நடந்ததைக் கூறுங்கள் கேட்க மிக ஆவலாக இருக்கிறது" என்றான்.

நந்தி என்ற பெயருள்ள பிராமணர் இருந்தான். அவன் வெண்குஷ்டத்தினால் அவதிப்பட்டுக் கொண்டு தன் வியாதியை போக்கிக் கொள்ள துலஜாபுரத்திற்குச் சென்று அங்கு பவானி பரமேசுவரியை மூன்று வருடங்கள் ஆராதனை செய்ய அம்பாள் சந்தலாபரமேச்வரியை சரணடைந்து சேவிக்கச் சொல்ல, அங்கே சென்று சந்தலாபரமேச்வரியிடம் ஏழு மாதங்கள் தவம் செய்ய, தேவி கனவில் தோன்றி "நீ கானகாபுரத்திலிருக்கும் மும்மூர்த்திகளின் அவதாரமான ஜகத்குரு ஸ்ரீநரசிம்ம சரசுவதியை சரணடைந்தால் அவர் உன் வியாதியைப் போக்குவார்" என்று கூறினாள். அப்பொழுது அவன் "நீ பெரும் தேவதை என்று துலஜாபரமேச்வரி சொன்னதினால் இங்கே வந்து ஏழு மாதம் தவம் செய்த பின் நீ இப்பொழுது ஒரு மனிதனிடம் போகச் சொல்கிறாயே. அப்படிச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னால் என் வியாதியைக் குணமாக்க முடிந்தால் சொல். இல்லை எனில் என் உயிரை இங்கே விட்டு விடுகிறேன் தவிர வேறு எங்கும் போக மாட்டேன்" என்று சொல்லிப் பிடிவாதமாக அங்கே இருக்க மறுநாளும் அதைப்போல் கனவு வந்தது. அதுவுமில்லாமல் கோயில் பூசாரி கனவிலும் தோன்றி நந்தி என்ற பிராமணரை இங்கிருந்து அனுப்பி விடுங்கள் என்று சொன்னாள். பூசாரி நந்தியைக் கூப்பிட்டு நீ இங்கிருந்து போய்விடு. இது தேவியின் கட்டளை என்று சொன்னார். அப்பொழுது நந்தி வேறு வழியில்லாமல் அங்கிருந்து புறப்பட்டு கானகாபுரம் வந்து மடத்தில் ஸ்ரீகுருமூர்த்தி இருக்கிறாரா என்று பார்த்து அங்கே

இல்லை எனத் தெரிந்து கொண்டு சுவாமி எங்கே என்று கேட்டார். சுவாமி சங்கமத்தில் இருக்கிறார். சற்று நேரத்தில் மடத்திற்கு வருவார் என்று சொல்ல அவருக்காக அங்கே காத்திருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் ஸ்ரீகுரு மடத்திற்கு வந்தார். நந்தி சுவாமியைப் பார்க்கச் செல்ல முற்பட்டபோது சீடர்கள் அவனை வெளியே நிறுத்தி வைத்துக் குருவிடம் சென்று "உங்களைப் பார்க்க உடல் முழுக்க வெண்குஷ்ட வியாதியுடன் ஒரு பிராமணர் வந்திருக்கிறார்" என்று சொன்னார்கள். ஸ்ரீகுரு "அவன் சந்தேகப்பிராணி. இருப்பினும் அவனை என் எதிரில் வரச்சொல்லுங்கள்" என்றார். இதைக்கேட்ட நந்தி அங்கேயே கீழே விழுந்து வணங்கி மெல்ல குருவிடம் வந்தான். அவனைப் பார்த்து ஸ்ரீகுரு "ஏனய்யா சந்தேகத்துடன் நீ எதற்கு இங்கே வந்தாய். அம்பாளால் முடியாதது மனிதனால் முடியுமா? சந்தேகப் பிராணிக்கு நினைத்தது நடக்குமா? முழு நம்பிக்கையிருந்தால்தான் கடவுளின் அருள் கிடைக்கும்" என்றார். ஸ்ரீகுரு எல்லாம் தெரிந்தவரென்று நினைத்துத் தன் தவறை உணர்ந்து மனம் திருந்தி ஸ்ரீகுருவிற்கு சாஸ்டாங்க வணக்கம் செய்து "சுவாமி நான் மூடன். என்னை மன்னித்துவிடுங்கள். அறியாமை என்ற இருட்டில் மூழ்கி உங்களைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. என் வாழ்வில் இன்று நன்னாள் ஆனதினால் உங்களைப் பார்க்க முடிந்தது. பாவியான நான் நீங்கள் மாயைக்கு அப்பாற்பட்டவரென்றும், சாட்சாத் பரபிரம்ம ரூபமென்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இன்று உங்கள் தரிசனத்தால் என் பாவங்கள் அகன்றன. நீங்கள் பூமியைக் காப்பாற்ற வந்த கங்கையைப் போல் எங்களைப் போன்ற பாவிகளைக் காப்பாற்ற மனித உருவத்தில் அவதரித்தீர்கள். கல்லான அகல்யை ஸ்ரீராமன் பாதங்கள் பட்டவுடன் சாபம் நீங்கவில்லையா? அதேபோல் உங்கள் பாதங்களைத் தொட்டவுடன் என் பாவங்கள் நீங்காதா? எனக்குக் கல்யாணம் ஆன பிறகு இந்த வியாதி வந்தது. அதைப் பார்த்த என் மனைவி என்னை வெறுத்துத் தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். என் வீட்டாரும் என்னை வீட்டை விட்டு



துரத்திவிட்டார்கள் என்று சொல்லி பிறகு அவன் துலஜா பவானியையும், சந்தலாபரமேசுவரியை வேண்டியதையும் அவர்கள் தன் வியாதியைப் போக்க முடியாமல் விட்டுவிட்டதையும் கூறி, ஆதலால் இங்கே உங்களைச் சரணடைந்தேன். தயவு செய்து இந்த வியாதி போய்விடுமா, இல்லையா என்று கூறுங்கள். போகாதென்றால் இங்கேயே உயிரை விட்டுவிடுவேன்" என்றான்.

சுவாமி சோமநாதன் என்ற சீடனைக் கூப்பிட்டு "இவனை சங்கமத்திற்கு அழைத்துப் போய் சங்கல்பம் சொல்லி அங்கே குளிக்க வைத்து அரச மரத்தைச் சுற்றச் செய்து பழைய ஆடைகளை கழற்றி எரித்து புதிய ஆடைகளை உடுத்தச் செய்து இங்கே கூட்டி வா" என்றார்.

பிறகு இருவரும் சங்கமத்திற்கு சென்று சங்கமத்தில் நந்தி குளித்தான். குளித்தவுடனே அவன் உடலிலிருந்த வெண்குஷ்ட வியாதி மறைந்து அவன் உடலின் தோற்றம் மாறியது. அரசமரத்தைச் சுற்றியவுடனே அவன் மேனி தங்க நிறம் பெற்றது. அவன் புதிய ஆடைகளை அணிந்து பழைய ஆடைகளை எரித்தவுடனே எரித்த இடம் சவுட்டு மண்ணாக மாறியது. பிறகு நந்தியுடன் சோமநாதன் மடத்திற்கு வந்தான்.

அங்கே இருந்தவர்கள் எல்லாம் நந்தியைப் பார்த்து திகைப்படைந்தார்கள். நந்தி ஸ்ரீகுருவை துதித்து சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். சுவாமி அவர்கள் அவனிடம் "நீ எண்ணியது நிறைவேறியதா? உன் உடலை எல்லாம் சோதனை செய்து பார்" என்றார். அவன் உடலெல்லாம் பார்க்கையில் ஒரு கால் தொடையில் கொஞ்சம் இருந்ததை கண்டு பயந்து "சுவாமி உங்கள் கருணைப் பார்வையால் என் உடல் முழுவதும் நன்றாக ஆயிற்று. ஆனால் கால் தொடையில் கொஞ்ச இடத்தில் மட்டும் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் தெரியவில்லை. தயவு செய்து அதையும் குணப்படுத்தி என்னைக் காப்பாற்றுங்கள்" என்று வேண்டினான்.

குருமூர்த்தி அவனிடம் "நீ மனிதனால் என்ன ஆகும் என்ற சந்தேகத்தில் இருந்ததால் அது முழுவதுமாகக் குணமாகவில்லை.

அதுவும் போக ஒரு உபாயம் சொல்கிறேன். நீ என் மேல் கவிதையுடன் என்னைப் போற்றிப் பாடு. அப்பொழுது மீதமிருந்த அந்தக் கொஞ்சமும் போய்விடும்" என்றார். அதைக்கேட்ட நந்தி, சுவாமியின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்து படிப்பறிவு இல்லாத நான் எப்படிக் கவிதை சொல்ல முடியும் என்று வேண்டினான். ஸ்ரீகுரு அவன் மேல் கருணை கொண்டு வாயைத் திறக்கச் சொல்லி சிறிது விபூதி எடுத்து நாவின்மேல் போட்டார். உடனே அவன் அறிவு பெற்று சுவாமியை வணங்கி பக்தி பரவசத்துடன் இப்படிப் போற்றலானான்.

"ஹே பரமேச்வரா! நீதான் அந்த பரபிரம்ம சொரூபம். நீதான் எல்லாவற்றையும் செயல்படச் செய்பவன். நீதான் மும்மூர்த்திகளின் அவதாரம். நீதான் ஆத்மா. நீதான் இயற்கையின் முக்குணங்களிலிருந்து பூதங்களை உருவாக்கி மாயையினால் வசப்பட்ட இந்த விஸ்தாரமடைந்த அசையும், அசையாத உலகை உண்டாக்கினாய். இந்த உலகம் முழுவதிலும் மனிதப் பிறவிதான் அறிவைப் பெற்றது. அப்படிப்பட்ட மானிடன் தாண்ட முடியாத சம்சார வலையில் விழுந்து பாவ புண்ணியங்களை செய்து கொண்டு சம்சாரத்தில் சுழல்கிறான். எத்தனை கல்பங்கள் ஆனாலும் இந்த மாயையிலிருந்து வெளிப்படமாட்டான். ஒரு சமயம் நற்காரியங்கள் செய்து புண்ணிய உலகிற்குச் சென்றாலும் அந்தப் புண்ணியம் தீர்ந்த பிறகு மழையினால் பூமியில் உணவாய், மனிதர்களால் உட்கொள்ளப்பட்டு அந்த சக்தியினால் ஆண்களின் விந்துவில் உயிர் அணுக்களாகி, தாயின் கர்ப்பத்தில் விழுந்து, அது ஐந்து நாட்களில் ஒரு குமிழாக உருவெடுக்கும். பதினைந்து நாட்களுக்கு அது கட்டியாகும். ஒரு மாதத்திற்கு மாமிச பிண்ட ரூபமாகும். நான்காவது மாதம் வரும் வரை அது பெரிதாகும். பிறகு தலை, இரண்டு பாதங்கள் ஏற்படும். ஐந்தாவது மாதத்தில் எல்லா உறுப்புகளும், தோல் மயிர்கள் ஏற்படும். அப்பவும் உங்களை நினைக்கும் ஆற்றல் வராது. ஆறாவது மாதத்தில் காற்றை இழுக்கவும், விடவும் செய்யும். ஏழாவது மாதத்தில் கேட்பது, ருசி முதலியன வரும். ஒன்பது



மாதம் வரை கர்ப்பத்தில் மூத்திரம் மலம் நடுவில் இருந்து வளரும். தாய் சாப்பிடுகிற காரம், உப்பு, கசப்பு முதலியவைகளால் கர்ப்பத்தின் ஜீவி அவற்றுக்கு ஏற்றார் போல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும். அந்த அவதியிலும் ஜீவன் உன்னை நினைக்கமாட்டான். பிரசவ வேளை வந்த பொழுது மிக கஷ்டப்பட்டு தாய் கர்ப்பத்திலிருந்து வெளி உலகிற்கு வரும். பிறந்த பிறகு மனித வாழ்வில் பாதி நாள் தூக்கத்தில் கடந்து போகும். மீதி நாளில் சில காலம் இளமைப்பருவமாக, படிப்பும் விளையாட்டும் என்று காலம் கழித்திருப்போமே தவிர உங்களை நினைக்க எண்ணுவதில்லை. பருவ வயது வந்த நேரத்தில் காமுகனாக இருந்து இல்லற வாழ்க்கையில் மூழ்கி உன்னை நினைக்க எண்ணுவதில்லை. வயது முதிர்ந்த காலத்தில் உடல் பலவீனமாகி ஏதும் செய்ய முடியாத நிலையில் உன்னை நினைக்க முடியவில்லை. இப்படி மனித வாழ்க்கை உன்னை நினைக்கும் பாக்கியம் பெறாமல் பலவித இன்னல்களில் சிக்கி தவிக்கின்றது. ஆகையால் பிரபோ, என் மீது தயவு கூர்ந்து என்னை இந்த சம்சாரக் கடலிலிருந்து காப்பாற்றுங்கள்" என்று கவிதை சொல்லி மேலும் பக்தி பரவசத்துடன் "இங்கு கூடியிருக்கும் மனிதர்களே, இங்கே நம் நடுவில் இருக்கும் ஸ்ரீகுருமூர்த்தி பரபிரம்ம ரூபமே தவிர வேறு யாதுமில்லை. இவரின் தரிசனத்தால் என் பாவங்கள் எல்லாம் காட்டுத் தீயில் எரிந்த இலைகளைப் போல் எரிந்து விட்டன. இவர்ப் பாத ஸ்பரிசத்தால் பிரம்மாவால் எழுதப்பட்ட தலையெழுத்தெல்லாம் மாறிவிடும். பொக்கிசம் போல் இவர் நமக்குக் கிடைத்தார். ஆத்மாவின் நலனை விரும்பும் அவர்களெல்லாம் இவரைப் போற்றி, பூஜித்து, சேவை செய்து நலம் பெறுங்கள். இவரின் மகிமை இன்னவென்று கூற முடியாது. சொல்லுக்கும், மனதிற்கும் அப்பார்ப்பட்ட இவர் மகிமையை வர்ணனை செய்ய முற்பட்டு வேதமே ஊமையாயிற்று" என்று போற்றி மேலும் சொல்ல வாய்வராமல் ஆனந்தக் கண்ணீர் விட்டுக்கொண்டு நின்றுவிட்டார். நந்தி செய்த ஸ்தோத்திரத்திற்கு மிக்க ஆனந்தம் அடைந்து ஸ்ரீகுரு அங்கு இருந்தவர்களிடம்

"இவருக்கு 'கவீச்வரன்' என்ற விருதை அளிக்கிறேன் இன்று முதல் இவரை கவீச்வரன் என்று அழைக்க வேண்டும்" என்று கூறினார். அந்தப் பரவசத்திலிருந்து மீண்டு நந்தி தன் உடலில் இருந்த கொஞ்சம் வெண்குஷ்டம் போனதைக் கண்டு சந்தோஷமடைந்து சுவாமியை வணங்கினார். அன்று முதல் அங்கேயே இருந்து ஸ்ரீகுருவிற்குச் சேவை செய்து கொண்டிருந்தான். இதேபோல் வேறொரு கவியும் குருவின் கிருபையை பெற்றான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 46

நாமதாரகன் சித்த முனியிடம் "முனீந்தரா சுவாமியிடம் வேறொரு புலவர் இருந்தார் என்றீரே, அவரைப் பற்றித் தெரிவியுங்கள்" என்று வேண்டினான்.

கானகாபுரத்தில் நந்தி எழுதிய ஸ்தோத்திரங்கள் சுற்றி இருக்கும் ஊர்களில் புகழடைந்தன. எல்லோரும் அவரின் கவிதைகளைப் படித்து தன்யர்களாகிக் கொண்டிருந்தார்கள். அப்படி சுவாமியின் மகிமையைத் தெரிந்து கொண்ட 'ஹிப்பரிக' என்ற கிராம மக்கள் ஸ்ரீகுருமூர்த்தியிடம் வந்து அவரை வேண்டி தம் கிராமத்திற்குக் கூட்டிச் சென்றார்கள். அவருக்கு ஒரு விழா செய்து வெகு விமரிசையாக பூஜைகள் செய்தார்கள். அந்த ஊரில் நரகேஸரி என்ற பிராமண புலவர் அங்கு இருக்கும் கல்லேச்வரனை தினமும் ஐந்து புதுப் பாசுரங்களைப் பாடி ஆராதனை செய்வார். அவர் கல்லேச்வரரைத் தவிர வேறு எந்த கடவுளையும் பூஜிக்க மாட்டார். ஸ்ரீகுரு ஊருக்கு வந்த அன்றே சில பிராமணர்கள் நரகேஸரியிடம் வந்து உத்தம பிராமணரே, கவீச்வரா, இன்று நம் ஊருக்கு ஸ்ரீகுரு நரசிம்ம சரசுவதி வந்திருக்கிறார். அவருக்குக் கவிதைகள் என்றால் மிகவும் பிடிக்கும். ஆகையால் நீங்கள் வந்து அவரின் மேல் நல்லதொரு கவிதையைச் சொல்லி அவரை ஆனந்தப்படச் செய்யுங்கள் என்று வேண்டினார்கள். அதற்கு அவர் "நான் என் வாயினால் கல்லேச்வரனை தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் துதிக்கமாட்டேன். அப்படியான நான் ஒரு மானிடனை எப்படித் துதிப்பேன். ஆகையால் என்னால் நீங்கள் வேண்டியதைச் செய்ய முடியாது" என்றார்.

பிறகு அன்று அவர் குளித்து ஈசனைப் பூஜிக்க ஆலயத்திற்குள் சென்று அவர் முன் உட்கார்ந்தான். அந்த நேரத்தில் அவனுக்குப் பெரும் தூக்கம் வந்தது. தூக்கத்தில் அவன் சிவன் முன் உட்கார்ந்தது போல், தன் முன் இருக்கும் லிங்கத்திற்குப் பதிலாக அங்கே ஸ்ரீகுருமூர்த்தி உட்கார்ந்தது போல் அப்பொழுது அவரை